Regd. No. M. 4900.    16-பக்கங்கள்.    தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம் ★ தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம் ★ நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 21-2-1948 சனிக்கிழமை { மலர் 24.

# நமக்கென்ன!

[புதுவை வ. பொன்னம்பலம்]

1. தெருவினிலே ஒருகிழவன் சென்ற நேரம்,
திடீரெனவே ஒரு மனிதன் அவன்முன் தோன்றி
இருகன்னம் சிவந்திடவே அறைந்த தன்றி,
எட்டியவன் மார்பினிலும் உதைத்து நின்றான்.
பெருமூட்டை தொப்பென்று வீழ்த லொப்பப்
பெரியவனும் நடுத்தெருவில் வீழ்ந்து விட்டான்.
அருகிருந்து பார்த்தவர்கள் பலபே ரேனும்
அவரவரும் நமக்கென்ன என ந டந்தார்.

2. வேகமிக வந்திட்ட 'மோட்டா' ரொன்று
விரைவாக ஒருமனிதன் மேலே மோத,
"ஆகாகா" என்றனர்கள் அருகி ருந்தோர்;
அடிபட்ட அவன்வீழ்ந்தான், நெடும ரம்போல்!
சாகவில்லை, குருதிபெருக் கெடுத்தோ டிற்றுத்
தலையினிலே; கண்டார்கள் சூழ்ந்தி ருந்தோர்
"போகலாமே, நமக்கென்ன?" என்று சொல்லிப்
புறப்பட்டார் அவரவர்கள் வீடு நோக்கி.

3. தலைநரைத்தும், கூன்வளைந்தும் தன்கைக் கோலால்
தடவிக்கொண் டேசென்றான், இடறி வீழ்ந்தான்,
இலைபோடும் தொட்டியிலே; என்னசெய்வான்?
இருகண்ணும் தெரியவில்லை வயதின் மூப்பால்;
அலைமோதும் அவனுள்ளம் அறிவார் யாவர்?
அங்கிருந்தே அலறுகிறான் உதவி கோரி.
பலமனிதர் நமக்கென்ன என்றியம்பிப்
பறக்கின்றார் அவ்வழியே செவிகொ டாமல்!

4. வீதியிலே ஒருகுழந்தை விம்மி விம்மி
வீறிட்டு அழுதுநின்றான்; வயதோ மூன்று.
ஆதியப்பன் அப்பிள்ளை தன்னைக் கேட்டான் [னான்
"அப்பாபேர் சொல்"லென்று; அவனும் சொன்
சேதியொன்றும் புரியவில்லை, தாணா வுக்குச்
சிறியவனைக் கொண்டுவிட நினைத்தான்; பின்னும்,
நீதியின்றி அங்குபல கேள்வி கேட்பார்,
நமக்கென்ன எனவிட்டு நேர்ந டந்தான்.

5. தெண்டபாணி பெரியஒரு தரகுக் காரன்,
தென்னங்கள் தினமருந்தி வீடு வந்து
பெண்டாட்டி பிள்ளையெலாம் கதறுமாறு
பெரியதடி கொண்டடித்து நொறுக்கி வந்தான்.
அண்டையிலே குடியிருந்த அலமு ஓர்நாள்
அத்தானைத் தூண்டிவிட்டாள், கேட்கச் சொல்லி!
"சண்டியுடன் நமக்கென்ன வேலை, நீபோய்த்
தாளிடுவாய் தெருக்கதவை!" என்றே சொன்னான்.

6. மாசிமகம் முன்னாளின் இரவுப் போதில்
மைலத்து முருகபிரான் பல்லக் கேற,
நேசமிகு தொண்டர்கள் காட்சி காண
நேர்மையுடன் நகை,பட்டு அணிந்து வந்தார்.
பேசிக்கொண் டேபோனார் எட்டுப் பேர்கள்;
பிளந்ததுகாண் அவர்காதை மேளச் சத்தம்!
ஆசையுடன் விரைகின்றார் சுவாமி பார்க்க;
அவர்கூற வில்லை நமக் கென்ன என்று!

பெண்கள் பகுதி:

# அடிமை வாழ்வு அகல.

[புவனை சாவித்திரி]

★

முன்னொரு இதழில் திருமதி சண்முகவடிவு அம்மையார் அறிவித்த நற்செய்திப்படி குடி-அரசில் பெண்கள் பகுதி நமக்குக் கிடைத்தும் அதைப் பூர்த்தி செய்யாமலே இரண்டொரு இதழ்கள் வந்திருப்பதைப் பார்க்கும் போது நமது பெண்ணுலகம் இன்னும் உறக்கத்திலிருந்து எழுச்சி பெறவில்லை என்றுதான் எனக்குத் தெள்ளிய முறையில் தோன்றுகிறது. உரிமையை, மானத்தை, சுயமரியாதையை விட்டுக் கொடுக்கமாட்டான் எந்த மனிதனும் என்று திருமதி இந்திரா கூறுவது ஒரு வகையில் இன்றைய திராவிட எழுச்சி நிலையில் உண்மை என்று ஒத்துக் கொள்வதாயினும், அதை அடைய ஆண் உலகத்திற்கு சுதந்தரம் தேவை என்பது உண்மையானால் நம் பெண்ணுலகிற்கு இருவகைச் சுதந்தரம் அவசியம் தேவை என்பதே என் துணிபு.

அதாவது வெள்ளையரின் ஏகாதிபத்தியம், வடநாட்டு சுரண்டல், உள்நாட்டு பார்ப்பனச் சுயநலம் ஆகிய இம்மூன்றிலிருந்தும் நம் திராவிட ஆண் மக்கள் விடுதலை பெற வேண்டுவதே ஆண்களின் சுதந்தரம். ஆனால் நம் பெண் இனத்திற்கு மேற்கண்ட திராவிட நாட்டுப் பிரிவினை மட்டுமல்ல, நீண்ட நாட்களாக ஆடவர்களால் மதமெனும் விஷத்தை ஊட்டி மயங்க வைத்து நம்மை என்னாளும் அடிமையாக்கி வைத்திருக்கும் அடிமைப்பிடியிலிருந்து வெளியாவது, ஆக இரண்டு சுதந்தரம் அத்தியாவசியமானவை. பெண்கள் ஆண்களின் சுகபோக உரிமைக்காக ஏற்பட்ட கருவிகளே என்ற நயவஞ்சக எண்ணம் இந்த நாட்டை விட்டே அகலவேண்டும். பெண்களுக்கும் தன்மானம், மனக்குறை, பகுத்தறிவு உண்டு என்பதைப் பெண்ணுலகம் நிரூபித்து நம் உரிமைப் போருக்குத் தயாராகும் வரை ஆணுலகம் நம்மை ஏய்த்துக்கொண்டுதான் வரும். பல சீர்திருத்த வாதிகள்கூட தங்கள் மனைவிமார்களை இன்னும் அடிமைப் பிடியிலிருந்து விடுவிக்க முன் வராமல் இருப்பதை இத்திராவிட நாட்டில்தான் அதிகமாகக் காணலாம். இன்றும் நம் பெண் மக்களில் பலர் ஆண்களின் கைப்பொம்மைகளாகிப் பெண் இனத்திற்கே இழிவு தேடும் இனத்துரோகிகளாகி விடுகிறார்கள். இவர்களின் செய்கை நம்நாட்டு உத்தமர் காந்தியாரை ஒரு இந்துவே கொன்றது போல. அத்தகைய சகோதரிகளைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது, எங்கள் வயிற்றுக் கொடுமை, இந்த நிலையில் விபசாரிகளாக வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது என்று கூறி விடுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் ஆண்களும் கற்பு பெண்களுக்குத்தானே உரிமையானது, ஆண்களுக்கு ஏது கற்பு, அதைக் காப்பாற்றுவது பெண்களின் கடமையே, பெண்கள் சரியாக நடந்தால் ஆண்களும் சரியாகி விடுவார்கள் என்ற மதவாதிகளின் வாக்கைக் காட்டி கற்பெனும் கற்பனைச் சொல்லால் நம்மிடம் வாதாடுகிறார்கள். இழிவான இந்து சமூகக்கொடுமையினால்எத்தனைதோழியர்கள் சித்திரவதைக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த அடிமைப் பிடியிலிருந்து மீளாததற்கு நம் சகோதரிகள் 100க்கு 10 பேர் கூடப் படிப்பில்லாத நிலையில் இருப்பதுதான் முதல் காரணமாகும். மேலும் நம் தந்தை பெரியார் மனைவி நாகம்மையார் போன்ற தியாக உணர்ச்சி, பேச்சு வன்மை கொண்ட தலைவிகள் இத்திராவிட நாட்டில் அதிகமில்லாமையே இதற்கு இரண்டாவது காரணமாகும். அப்பொழுதுதான் நம் இனப்போருக்கு நாம் ஆயத்தமாக முடியும். இந்த நிலையை அடைவதற்கு அரசாங்கத்தாரும் நமக்கு உதவியாக இருக்க வேண்டும். இன்னும் மூலகாரணமாக விளங்கும் மதம், ஜாதி, புராணம், கோவில் சடங்குகள் போன்றவைகளை அகற்றிவிட்டுப் பொதுவுடைமை சமுதாய ஒற்றுமைகளை விளக்கும் கருத்துகளைக் கொண்ட இன வெழுச்சி வெளியீடுகள் நாட்டில் அதிகம் காண வேண்டும். ஏதோ இப்போதுதான் நாட்டில் ஒருவித அதிவேக இனவெழுச்சி காரணமாகப் பல விதப் பத்திரிகைகள் மாதமொன்றாகத் தோன்றுவது போல், நம் பெண்ணுலகிற்கும் பல தனிப் பத்திரிகைகளை அவசியம் நடத்த படித்த, வசதியுள்ள பெண்கள் முன்வரவேண்டியது அதி அத்தியாவசியமானது. குறிப்பாக இந்த நற்பணியில் முதன்மை ஸ்தானம் பெற்ற தோழிர் ஜி. பத்மாவதி அம்மாள், அதாவது தற்போது "வன்னி முரசு" என்ற பத்திரிகையைப் பெண்களுக்காக நடத்தும் வகையில் நாம் நமது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே இனிமேலாவது நம் பெண் இன உரிமைப்போருக்குத் தயாராக ஒவ்வொரு திராவிட இனப் பெண்மணிகளும் முன்வர வேண்டுமென்பதே என் வேண்டுகோள். இதை இன்னும் தெளிவுபடும்முறையில்தஞ்சையில் தோழர் எம். ஆர். ராதா நாடக சபையாரால் நடத்தப்படும் தூக்குமேடை நாடகத்தில் "ஏ ஆரிய மாயாவி, நீ உன் இனத்தைக்காக்கப் புறப்பட்டு விட்டாய், இதோ நானும் என் திராவிட இனத்தைக் காக்கப் புறப்படுகிறேன் என்று வாணியைப் பார்த்து வேணியாக நடிக்கும் திராவிடப் பெண் கூறுவது நம் உள்ளத்தையே கொள்ளை கொள்ளும் காட்சியாகும். அத்தகைய உண்மை இன எழுச்சி நம் பெண் மக்களிடையே உண்டாக வேண்டுமென்பதே என் கோரிக்கை.

வாழ்க திராவிடம்!
வாழ்க பெண்ணுலகம்!

## புதுமனை புகுவிழா.

கரூரில் நமது இயக்கப் பிரமுகரும் ஈரோடு நாதன் கம்பெனி லிமிடெட் பெரும் பங்குதாரருமான தோழர் பி. பெருமாள் நாடார் அவர்கள் லட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டுப் புதிதாகக் கட்டிய அழகான மாளிகையின் புதுமனை புகுவிழா 11-2-1948 தேதி காலை எவ்விதச் சடங்கும், ஆடம்பரமும் இன்றி ஏனையோருக்கும் எடுத்துக் காட்டான முறையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நகரப் பிரமுகர்கள், அதிகாரிகள், இயக்கத் தோழர்கள், மற்றும் அவரது உறவினர்கள் முதலானவர்கள் ஏராளமாக வந்திருந்தனர். பார்ப்பனப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தார்கள் என்பதோடு சடங்கும் ஆடம்பரமும் இன்றிச் சிறப்பாக நடைபெற்ற விழாவைப் பாராட்டினார்கள்.

ரோஜா முத்தையா

# பிராமண மதம் தன் வேலையைத்தான் செய்யும்.

## ஆனால் நாம் அதை ஏற்கலாமா?

(கைவல்யம்)

★

மகாத்மா காந்தி அவர்கள் பெரியவர்களில் பெரியவர் என்று உலகமெல்லாம் சொல்லிவிட்டது. உலகத்திற்கு இவ்வளவு அறிமுகப்பட்டவர்கள் எப்பொழுதுமே இருந்ததில்லை. அப்பேர்பட்ட பெரியவரை இந்து மகா சபையைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொன்றார். இந்துக்களே! நீங்கள் தீண்டாமையை விட்டுவிடாமல் போனால் உங்கள் இந்து மதம் அழிந்து போகும். இந்துக்களே! நீங்கள் சாதி வித்தியாசத்தையும், கீழ் மேல் என்பதையும் விட்டு விடாமல் போனீர்களானால் நீங்களே அழிந்து போவீர்கள். உங்கள் மதத்தை வியாபாரத் தோரணையில் கொண்டு வந்து, உங்கள் கோவில்கள் விபசார விடுதியாகவிருக்கிறது என்று அவர் சொன்னார். இந்த வார்த்தைகளெல்லாம் சனாதன தருமமென்கிற பிராமணர்களுக்கெல்லாம் நேர் விரோதம். சனாதன இந்து, அது வேண்டும் அப்படியேயிருக்க வேண்மென்கிற இந்து, புராண இந்து, குருக்கள் கட்டுப்பாட்டை இந்து மதமென்று நம்பிக் கொண்டிருக்கும் இந்து, மத சம்பந்தமான வேஷங்களும், அபிநயங்களும், லாபங்களும் பிழைப்புகளுமுடைய இந்து, புரோகிதன் அர்ச்சகன் சாஸ்திரி குரு முதலிய இந்து, தானதருமம் வாங்கிப் பிராமண போஜனமுண்டு வாழும் எல்லாப்பிராமண இந்து ஆகிய எல்லா இந்துவும் மகாத்மா காந்தி வார்த்தையில் திருப்தி கொள்ள மாட்டார்கள். எந்தப் பிராமணனும் சனாதன தருமத்திற்கு விரோதமாக நடப்பான். ஆனால் அதற்கு மாற்றமாக ஒரு சீர்திருத்தம் வந்தால் எவரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். திருவையாறு ஆஸ்டல் சமபந்தி போசனத்தை உலகமெல்லாம் சுற்றி, எல்லா ஜாதியாருடனிருந்துண்ட ஆனரபில் சீனிவாசசாஸ்திரியே ஒத்துக் கொள்ளவில்லை என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பேச்சில் ஒத்துக் கொள்வார்கள் என்றாலும் மறைவாக அதைக்கெடுக்க மறைவில் தந்திரமான பேச்சு, செய்கை எல்லாம் செய்வார்கள்.

மகாத்மா காந்தி அவர்கள் தேசீயத்தை முன்னணியிலிருந்து நடத்திப் பலனுக்குக் கொண்டு வந்து செல்வாக்குப்பெற்றவரானபடியால் அவரை நேரடியில் பகைத்துக் கொள்ள முடியவில்லை. சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது அவர்கள் வழக்கம். சமயம் கிடைத்தால் சனாதன தருமத்தை நிலைநிறுத்தவே. பார்ப்பனர்கள் பூர்வீக இந்து தருமத்தையும் இந்துக் கலாச்சாரத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று எழுத்துப் பிரசாரமும் செய்வார்கள். இவர்கள் எவ்வளவு தூரம் இந்து தர்மத்திலும் எற்பாட்டிலும் இருக்கிறார்கள் என்று யார் கேட்பது? புத்தியிருப்பவன் சொல்வதை புத்தியில்லாதவன் கேட்டுத்தானே ஆக வேண்டும். சிறிது சமயம் கிடைத்தவுடன் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியாரைக் கொண்டு, பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு விரோதமாக உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாதென்று உத்தரவு போடவைத்து விட்டார்களே! பண்டைய மத சம்பிரதாயத்தில் தீண்டாமையும், வருணாஸ்ரமமும் தானே முக்கியம். காந்திப் பக்தர்கள் வேலையைப் பார்த்தீர்களா? தீண்டாமையும் ஜாதிவித்தியாசமும் போகவேண்டுமென்றுதானே மகாத்மா காந்தியின் உபதேசமும் எண்ணமும். "இனிமேல் மகாத்மா காந்தி சொல்லியதைப் பின்பற்றி நடந்து காட்டுவதே அவருக்குச் செலுத்தும் பக்தியும் மரியாதையும்" என்று கூட்டத்தில் கோவிந்தாப் போடுகிறார்கள். அதோடு அவர்கள் பக்தி முடிந்து விடும். தேசீய வாழ்வில் மகாத்மாவைத் தேசம் கொண்டாடியே தீரும். தங்கள் மேன்மைக்கு முட்டாள்களை ஏய்த்துத் தாங்கள் முன் நிற்க எதிலும் சேர்வார்கள். "எனக்குச் சாதியில்லை, எல்லா வீட்டிலும் சாப்பிடுவேன்" என்பான். சாப்பிடுவான். அவர்கள் வீட்டுக்குப் போனால் அங்கு வேறு மாதிரியாகவிருக்கும். அதிலும் சோறு பார்ப்பானுக்கு லாபமாகவும், நமக்கு நஷ்டமாகவுமிருக்கிறது. எய்த்துப் பழகினவனும் ஏமாந்து பழகினவனும் சரியாக நடக்கவேண்டுமென்பதைச் சொல்லுகிறது சுயமரியாதைச் சங்கம்.

உலகத்திலுள்ள இராஜாக்கள், இராஜப் பிரதிநிதிகள், இராசாங்கத்திற்குத் தலைமை வகிக்கும் பிரசிடெண்டுகள், மந்திரிகள், பிரபுக்கள், சேனாதிபதிகள், புத்த, மகமதிய, கிறிஸ்துவக் குருமார்கள் எல்லா ஜாதியார்களும் மகாத்மா காந்தியவர்களை மகானென்றும் ஆத்ம ஞானி என்றும் மகாபெரியவரென்றும் புகழ்ந்து, வாழ்த்தி வருத்தம் தெரியப்படுத்தினார்கள். நமது நாட்டிலுள்ள ஆச்சாரி பீடங்கள், மடாதிபதிகள், ஜீயர்கள், லோககுரு, சமயக்குரு, ஜாதிக்குரு, புரோகிதக்குரு, அர்ச்சகக்குரு, சாஸ்திரி, கனபாடிகள் இனியும் எத்தனையோ பேர்கள், நமது சமயப் பெரியவர்கள், நமது சமயத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறவர்களான எத்தனையோ பேர்கள் மகாத்மாவை ஆத்ம ஞானி என்றும் பெரியார் என்றும் புகழ்ந்து, மரண துக்கம் விசாரித்தார்கள். பிராமணர்கள் தவிர மற்றவர்களை மகான் என்றும், ஆத்ம ஞானி என்றும், புகழப் பிராமண மதம் இடம் கொடுக்கவில்லை. எவ்வளவு தப்பில் நடந்த பார்ப்பானாக விருந்தும் மதவேஷம் போட்டு வேதத்தில் இரண்டு சுலோகம் தெரிந்தவனாக விருந்தால் குருவென்றும், ஞானி என்றும் சொல்லுவார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாகத் திருவண்ணாமலையைப் பாருங்கள். ஊராரால் கொடுக்கப்பட்டுத் தமிழ்ப் பரதேசிகளால் சேகரம் பண்ணின மடமும், சொத்தும் தனியாகச் சாமியார் சம்பாதித்ததா? தனித் சொத்தா? பொதுச்சொத்தா? என்கிற விவகாரம் வர, நான் சொந்தமாகச் சம்பாதித்தது என்று சாமியார் கோர்ட்டில் தீர்ப்புப் பெற்றுச் சொத்தையும் மடத்தையும் தன் சொந்தத் தம்பிக்கு உயில் எழுதி வைத்துத் திருவண்ணாமலையில் ரமண ரிஷியாக இருக்கிறார். இவரை ரிஷியிலிருந்து பகவான் ரமணரிஷியாக்கியிருக்கிறார்கள். இதில் பாருங்கள் ரிஷியின் யோக்கியதையையும் பகவான் தன்மையையும். பார்த்தீர்களா? இதற்கும் சமாதானம் சொல்லுவார்கள். அவருக்கும் தம்பி என்றும், அண்ணனென்றும், நீ என்றும், நானென்றுமுண்டா? பற்றில்லாமலிருக்கும் கர்மயோகியல்லவா அவர் என்பார்கள். அதற்குமேல் நம்முடைய பாமரத்தன்மையும், பகுத்தறிவுச் சூனியமும் பாதத்தில் விழுந்து அங்கு பார்ப்பான் வயிற்றுக்குத் தொலைத்து விட்டுத்தானே வருகிறது. எந்த அயோக்கியனும் எதையும்கூறித் தப்பித்துக்கொள்ள, பெரியார் சொல்லுவதுபோல மதமிருக்கையில் அவர்களுக்கு என்ன குறைவு?

பொய்யும், கற்பனையும், ஏமாற்றும் நிறைந்த பிராமண மதத்திற்கு விரோதமாக இருப்பவர்கள், யாராயிருந்தாலும் அவர்களை எப்படியும் தொலைத்து விடுவார்கள். நந்தன் சிதம்பரம் கோவிலுக்குள் போகவேண்டுமென்றான். பெத்தான் சாம்பன் சிவ

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

# கார்ல் மார்க்ஸ் தர்க்கம்.

# (Dialectics of Karl Marx)

வேலூர் R. பார்த்தசாரதி B. A. (Hons.)

★

கார்ல் மார்க்ஸின் கருத்துகளும் போதனைகளும் மார்க்கஸீயம் எனப்படும். மார்க்ஸின் காலத்தில் அய்ரோப்பாவில் மக்களைப் பெரிதும் கவர்ந்த ஜெர்மனியின் தத்துவத்தையும்; இங்கிலாந்தின் இலக்கிய காலப் பொருளாதார நூலையும், பிரெஞ்சுச் சமதர்மத்தையும் தழுவி ஒன்று சேர்த்து வெளியிட்டதே மார்க்கஸீயம். ஒவ்வாத கருத்துக்களை உதறித்தள்ளி, சிறந்தகருத்துகளைத் தெரிந்தெடுத்து, இவற்றோடு தம் ஆராய்ச்சியினால் அகழ்ந்தெடுத்த அருங்கருத்துக்களைச் சேர்த்துச் சமதர்மத்தை உருவாக்கினார். இதற்கே மார்க்கஸீயம் என்று பெயர். இம்மார்க்கஸீயமே உலக மக்களின் இன்றைய மறையாகத் திகழ்வது. மார்க்கஸீயத்தை இருபிரிவாகப் பிரிக்கலாம். 1. தத்துவம். 2. பொருளாதாரம். மார்க்ஸின் தத்துவத்தை இரண்டாகப் பிரிக்கலாம். 1. தர்க்க அனாத்துமவாதம். (Dialectical Materialism) 2. வரலாற்று அனாத்துமவாதம் (Historical Materialism)

இயற்கையின் தோற்றத்தைத் தர்க்க முறைப்படி கற்றறிந்து, அவ்வியற்கைத் தோற்றத்தையும், கருத்தையும், தேற்றத்தையும் (Theory) உருவம் கொடுத்து விவரிப்பதற்குத் தர்க்க அனாத்துமவாதம் என்பர், தத்துவப் பேராசிரியர்கள்.

தர்க்க அனாத்துமவாதம் கிரேக்க தத்துவப் பேராசிரியர்களால் முதலில் எழுதப்பட்டு, காலப் போக்கில் வளர்ச்சியடைந்து வந்தது. அலெக்ஸாண்டர் காலத்தில் கிரேக்கர்களாலும். இடைக் காலத்தில் அராபியர்களாலும் வளர்க்கப்பட்டு, இறுதியில் அய்ரோப்பாவில் வளர்ந்தது. இடைக்காலத்திலும், இடைக்காலத்துக்குப் பிறகும் விஞ்ஞானமும் மனித அறிவும் பண்பட்டன. எனவே இடைக்காலத்துக்கு முன்பிருந்த தர்க்கம், மிகக் குறைந்ததாகவே இருந்திருக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் ஜெர்மன் தத்துவாசிரியரான "ஹீகல்" தர்க்கத்தைப் பண்படுத்திக் காலத்துக்கு ஏற்றவாறு எழுதி வைத்தார். இதனால்தான் மார்க்ஸும் எங்கெல்ஸும் தர்க்கத்தில் "ஹீகலைப்" பின்பற்றுவதாகக் கூறுகிறார்கள். இருப்பினும் மார்க்ஸ்-எங்கெல்ஸ் தர்க்கம், ஹீகலுக்குச் சமமானதாக இல்லை. ஹீகலின் தர்க்கத்திலுள்ள சிறந்த கருத்துக்களை எடுத்து, அவற்றோடுதம் பண்பட்ட, உயரிய கருத்துக்களையும் சேர்த்தே இவர்கள் தர்க்கப் பொருள் முறையை ஏற்படுத்தினர்.

"எனது தர்க்கம் ஹீகலின் தர்க்கத்தினின்றும் மாறுபட்டது மட்டுமன்று, அதற்கு நேர்எதிரானது; 'கருத்து' என்னும் பெயரின் கீழ் எண்ணத்தை (Thought) த் தனிப்பட்டதொரு பொருளாக மாற்றிக், கருத்தே இவ்வுலகை ஆக்கியது, இக்கருத்தின் வெளித்தோற்றமே உலகு என ஹீகல் கருதுகிறார்; ஆனால் இவ்வாறின்றி, மனிதனின் மனதில் பிரதிபலித்து, அவன் எண்ணத்தின் உருவங்களாக மாறும் இவ்வனாத்தும உலகம்தான் கற்பனையேயன்றி வேறொன்றில்லை". இவ்வாறு மார்க்ஸ் மூலதனத்தில்குறிப்பிடுகின்றார்.

பழங்காலத் தத்துவப் பேராசிரியர்கள் ஒரு கருத்தில் பலமாறுபாடுகள் தோன்றி, மாறுபட்ட கருத்துக்கள் ஒன்றோடொன்று மோதுவதால், இறுதியாக உண்மை வெளிப்படுகிறது என்று நினைத்தார்கள். நாளடைவில் இக்கருத்து இயற்கைக்கும், இயற்கையில் நிகழும் தோற்றங்கட்கும், அவற்றின் மாறுபாடுகட்கும் விளக்கம் கூறப் புகுத்தப்பட்டது. எனவே "இயற்கை தர்க்கத்தின் சோதனை. இச்சோதனைக்குத் தற்கால இயற்கை விஞ்ஞான நூல் நாள்தோறும் பெருகிச் செல்வமடையும் பொருள்களைத் தருகிறது; இறுதியில் இயற்கையின் மாறுபாடு தர்க்க ரீதியானது மானச சாத்திரத்தைத் (Metaphysics) தழுவியதல்ல என்பது வெளியாகிறது" என எங்கெல்ஸ் (Engels) கூறியுள்ளார்.

1. பல பொருள்களும் தோற்றங்களும் ஒன்று சேர்ந்தது இயற்கை. பல பொருள்களும் தோற்றங்களும் ஒன்று சேர்ந்து, ஒன்றையொன்று தழுவி, ஒன்றையொன்று முடிவு செய்யக் கூடியதாய், ஆதிமுதல் தொடர்ச்சியாக ஒரு முழுவடிவாய் அமைந்ததே இயற்கை. எனவே ஒரு தோற்றத்தை ஆராயப் புகுந்தால், அதனோடு தொடர்புடைய பல தோற்றங்களையும் ஆராய வேண்டும். பல பொருள்களோடு பின்னிக் கிடக்கும் ஒரு பொருளை மட்டும் பிரித்தெடுத்து அதன் பண்புகளை ஆராயப் புகுவது பயன் தராது. எனவே இயற்கையில் ஏற்படும் பல தோற்றங்களையும் மாறுதல்களையும் ஒன்றாகச் சேர்த்து ஆராய்வதே அறிவுடைமை. இதுவே தர்க்க முறைமை.

2. இயற்கை இயங்குவது, மாறுவது, நகர்வது, வளர்வது, புதுப்பிக்கத் தகுந்தது. ஒரு சில பொருள்கள் அழியும்போது ஒரு சில பொருள்கள் தோன்றுகின்றன. தோன்றி வளருகின்றன. இக்கருத்தே மார்க்ஸின் தர்க்கத்தின் அடிப்படை. எங்கெல்ஸ் "லட்விக் ப்யூவர்பக்" என்னும் நூலில், "இவ்வுலகு செய்து முடிக்கப்பட்டு ஆயத்தமாக உள்ள பல பொருள்களின் கலப்பல்ல, மாறுதல்களின் கலப்புகள்; இப்பொருள்களின் மாறுதல்கள் நம்மனதில் ஏற்படும் சாயல்களைப் (images) போல, தடையின்றி வருவதும் போவதுமாக இருக்கின்றன".

இயற்கையின் தோற்றங்களை

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

**மடமையைப் பெருக்கும் வஞ்சக்கருவி மதம்.**

# ஆல்கபோன் கூட்டம்!

[துறையூர் நாராயணன்]

★

1922-ம் ஆண்டிலே அமெரிக்க நாட்டிலே 'ஆல்கபோன்' என்ற பெயர் முதன் முதல் அறிவிக்கப்பட்டது. ஆல்கபோன் என்றவுடன் அஞ்சாத தீரர்கள் எனப் பெயர் எடுத்த வீரர்கள் எல்லாம் அஞ்சி ஒடி ஒளிந்தனர். பொது மக்கள் ஆல்கபோனால் ஆடுமாடுகளைப் போல நடத்தப்பட்டனர். எங்கும் கொலையும் துப்பாக்கி மருந்துகளின் நாற்றமுமே காணப்பட்டது. பட்டப்பகலிலே நடுரஸ்தாவிலே தனக்கு விரோதமாக இருக்கும் நண்பர்களையெல்லாம் சுட்டுக்கொன்றான் ஆல்கபோன். பூக்கடைகளிலே, சிற்றுண்டிச் சாலைகளிலே, இசையரங்குகளிலே, அரச அவைகளிலே இன்னும் எங்கெங்கோவெல்லாம் பிணக்குவியல்களைக் குவித்தான் சண்டாளன். எதிர்காலம் என்று ஒன்று இருக்கிறது என்பதைக் கனவிலும் கருதாமல் இரக்கம் என்பதையே இன்னதென்றறியாமல் தான் சென்ற இடமெல்லாம் வெற்றிக்கொடி நாட்டி அமெரிக்க நாட்டையே ஒரு குடையின் கீழ் ஆள மனப்பால் குடித்த இவன் 1930-ம் வருடம் ஜுலை மாதம் 16ந் தேதி 5000 குற்றங்கள் சாட்டப்பட்டு கைதிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டுச் சிறைத்தண்டனை யடைந்தான். எதிர் காலம் என்று ஒன்று இருக்கிறது என்பதைக் கைதிக் கூண்டிலே நிற்கும்போது உணர்ந்தானாம் ஆல்கபோன்.

இத்தகைய கொடுமை நிறைந்த ஆல்கபோனையும் நல்லவனாகி விட்டது, நம் நாட்டிலேயுள்ள இந்துமகாசபை என்று கூறப்படும்படியான பார்ப்பனக் கூட்டம். ஆல்கபோன் கூட்டத்தினராவது மக்களின் உயிரையும் பொருளையுமே கொள்ளையடித்தனர். ஆனால் இந்தப் பார்ப்பனக் கூட்டமோ, மக்களின் உயிரையும், பொருளையும், அறிவையும், ஆண்மையையும், கலையையும், காவியத்தையும்—ஏன்! திராவிடர்களின் மானத்தையுமே கொள்ளையடித்து விட்டது-இன்னும் கொள்ளையடித்துக் கொண்டு வருகிறது. இவைகளெல்லாம் போதாது என்று இன்று, இதோ, தன்னலமற்ற, அன்பின் சிகரமான ஒரு வீரரைச் சுட்டுக் கொன்று விட்டது. ஆம்! கொன்றே விட்டது. ஆல்கபோனும் செய்யக் கூசிய நாசகாரச் செயலை இந்த ஆரியக் கூட்டம் கண நேரத்தில் செய்து காட்டி விட்டது. என்ன கொடுமை நிறைந்த உள்ளம்!

எந்த இந்துமதம் நாலாந்தாவையும் அதிலேயுள்ள பல்கலைக் கழகத்தையும் சுட்டுப்பொசுக்கியதோ, எந்த இந்துமதம் ராமலிங்கரையும், நந்தனாரையும் தீக்கிரையாக்கி விட்டு 'ஜோதியில் கலந்தனர்' என்று எழுதிவைத்ததோ, எந்த இந்து மதம் 8000 சமணர்களைக் கழுவிலேற்றிவிட்டு அவர்களின் மண்டை ஓடுகளின் மேல் தங்களின் மதத்தை ஸ்தாபித்ததோ, எந்த இந்து மதம் வேள்வியின் பெயரால் ஆட்டையும் மாட்டையும் பொசுக்கித்தின்று கொழுத்ததோ, எந்த இந்து மதம் "அழியக்கூடாது" என்று இன்றையச் சென்னை அரசிலார் 'பள்ளிக்கூடத்திலே நாத்தீகம் போதிக்காதே, சினிமாவிலே மதத்தை இகழாதே' என்று அறிவுக்குத்தடை போடுகிறார்களோ, எந்த இந்து மதம் ஆதித்திராவிடர்களின் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்ததோ, எந்த இந்த மதம் குருகுலப் போராட்டத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் காங்கரசிலிருந்து வெளியேறச் சதி செய்ததோ, எந்த இந்து மதம் தோழர் M. N. ராயையும், ஜனாப் ஜின்னாவையும் காங்கரசிலிருந்து வெளியேறச் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றதோ, அதே இந்து மதம் இன்று உலகின் வழிகாட்டி, விலையில்லா மாணிக்கம், அரசியல் அறிஞன், அகிம்சையின் அஸ்திவாரம், பொறுமையின் சிகரம், உலகம் போற்றும் உத்தமன் என்றெல்லாம் புகழப்படும் பெரியார் காந்தியார் அவர்களைக்கொன்று குவித்துவிட்டு குதூகலிக்கிறது. ஆனந்தத் தாண்டவம் புரிகிறது; மக்களுக்குச் சர்க்கரையும், கற்கண்டும் வழங்குகிறது, மற்றவர்களையும் அதன் மகிழ்ச்சியிலே பங்குகொள்ளும்படிச்செய்ய.

தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தான் காங்கரசிலிருந்து வெளியேற எண்ணங்கொண்ட போது, எந்தக் காந்தியாரிடம் சென்று எந்த மதத்தை விட்டொழியுங்கள் என்று கூறினாரோ அந்தக் காந்தியார் எந்த இந்துமதத்தைக் கைவிட மறுத்தாரோ அதே இந்து மதம் அதே காந்தியாரை—மதவெறியின் எதிரொலிகள் தாண்டவமாடிய நவகாலிக்கும், பீகாருக்கும் அஞ்சாமல் சென்று அவர்களுக்கு அறிவுரைகள் ஊட்டிய அண்ணலை—அழித்தே விட்டது. ஆம்! 'கத்தியின்றி ரத்தமின்றியுத்தமொன்று வருகுது' என்று கவிதை பாடிப் புதுப்போர் ஆரம்பித்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றவர் என்று தன்னால் விளம்பரப்படுத்திய வீரனை வீழ்த்தியே விட்டது.

எந்தப் புன்னகை கண்டு ஆயிரக்கணக்கான கவிஞர்கள் மெய் மறந்து,

'சோலை மலரொலியோ உனது சுந்தரப் புன்னகைதான்' என்று கவிதை பாடினார்களோ அந்தப் புன்னகையைப் பார்த்த பிறகும் தான் ஒன்று, இரண்டு, என்று மூன்றுமுறை சுட்டான் இந்தியாவின் ஆல்கபோன் ஒருவன். எந்தப் புன்னகையை நேரிலேகூடப் பார்க்காமல் படத்தில் மட்டும் பார்த்து அதிலே லயித்து ஆயிரக் கணக்கான தீர வாலிபர்கள் தியாக அக்கினியிலே தாவிக்குதித்தார்களோ அதே புன்னகைக்கு மதிப்பில்லாமல் செய்து விட்டான் மடையன். அவ்வளவு கல் நெஞ்சக்காரன் அந்த இந்து மதவெறி பிடித்த மூடன்.

உலகின் சரித்திர ஏடுகளை நாம்

**மக்கள் முற்போக்கை மறுப்பது மதம்.**

புரட்டிப் பார்க்கும்போது 'நிகழ்காலம்' என்னும் அத்தியாயத்தில் ''வீணர்களின் விளையாட்டு'' என்னும் தலைப்பின் கீழ் இருந்த செய்திகளைக் கண்டோம்—வாசித்தோம்.

பலவருடங்களுக்கு முன்னால், மக்கள் போதிய அளவு முன்னேறாத காலத்திலே தன்னாட்டிற்கு உழைத்த அப்ரகாம் லிங்கன் நாடகக் கொட்டகையிலே சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற வாசகத்தைப் படித்தோம். திடுக்கிட்டோம். காட்டுமிராண்டிகளின் காலம், நாகரீகம் வளராத காலம், தலைவர்களின் பெருமையை உணராத காலம் என எண்ணிப் பெருமூச்சு விட்டு விட்டு, காலம் செல்லச் செல்ல நமது ஒடிந்த உள்ளத்தையும் மாற்றிக் கொண்டோம். இரண்டாவதாக அயர்லாந்தை சுதந்தரப் பாதைக்கு அழைத்துச் சென்ற மைக்கேல் காலின்ஸ் சுட்டுக் கொல்லப்பட்ட பகுதியைப் படித்தோம். திகைத்தோம். ஏற்பட்ட ஏக்கத்தை 'ஜனநாயகம்' பரவாத காலம் என எண்ணி நீக்கிக் கொண்டோம்.

கடைசியாகப் பர்மாவின் சிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டோம். கடகடவெனப்புரண்டு அழுதோம், அட நன்றிகெட்ட நிகழ் காலமே......! நீ அறிஞர் உழைக்கு அளிக்கும் பரிசு இதுதானா...? எனத் தூற்றினோம். தூற்றிய வாய் மூடவில்லை. ஒழுகிய கண்ணீரைத் துடைக்கவில்லை. அதற்குள்ளாக ...ஆம்...பயங்கரமான செயல்தான்! மனதைக் கலக்கும் பேரிடிதான்! உயிரையும் பிரித்துவிடும் கோரக் கொடுமைதான்! ஒன்று, இரண்டு, மூன்று என பயங்கரமான வெடிகள், இந்தியாவையே திசை தெரியாமல் செய்து விட்ட வெடிகள், கேட்கவே திரும்பிப் பார்த்தோம்.

காந்தியார் மறைந்தார்......... இல்லை, மறைக்கப்பட்டு விட்டார். இனி நம்முன் நிற்கும் பிரச்னை என்ன? இனி நாம் செய்ய வேண்டியது யாது? மறைந்த மகாத்மாவை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டுக் கொண்டு இருப்பதுதானா? மறைந்த மனுக் கூட்டத்தையும் அதன் ஆதிக்கத்தையும் இன்னும் மக்கள் மன்றங்களிலே உலவ விட்டுக் கொண்டிருப்பதுதானா? அழித்த ஆல்கபோன் கூட்டத்தினருக்கு அரசியலார் இன்னும் ஆதிக்கம் செய்ய வழிவகுத்து விட்டுக் கொண்டிருப்பதுதானா? நீண்டிய பாம்பிற்குப் பாலூட்டுவதா? உதைத்த காலுக்கு முத்தமிடுவதா? மகாத்மாவை மறைத்தவனை 'மகேஸ்வரா' என வணங்குவதா? கையிலே குத்திய கண்ணாடியையும் அதன் காரணமாக ஒழுகும் ரத்தத்தையும் கண்டு கண் கலங்கிக் கண்ணீர்விட்டு விட்டு மீண்டும் கண்ணே மணியே என்று கண்ணாடியோடு கொஞ்சும் பைத்தியக்காரர்களாகிவிடுவதா? தேசீயத் தோழர்களே!! நீங்களே பதில் கூறுங்கள்.

எந்த இந்து மதம் மகாத்மாவைக் கொன்றதோ அந்த இந்து மதத்தை ஒழிக்க, பூண்டற்றுப் போகச் செய்ய, சவக்குழியில் புதைக்க, ஓட ஓட விரட்டக்கச்சை வரிந்து கட்டுங்கள். கையிலே பகுத்தறிவு வாளை ஏந்துங்கள். அந்த ஆல்கபோன் கூட்டத்தினரின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிப்பதையே தனது வாழ்வின் லட்சியமாகக் கொண்டு சிற்றூர் பேரூர்களுக்கெல்லாம் சென்று ஓயாமல் உழைக்கும் திராவிடத்தின் தந்தை பெரியார் அவர்கள் அமைக்கும் முன்னணிப் படையில் சேருங்கள். அசைந்தாடும் கருங் கொடியின் கீழ் அய்க்கியப்பட்டு உங்களின் ஏகோபித்த குரலை பொதுஜனக் குரலாக மாற்றி, அரசியலாரின் அசட்டையைத் தவிடுபொடியாக, அவர்கள் ஆளும் மன்றம் அதிர்ந்து விழ முழக்கமிடுங்கள். 'ஒழிக இந்து மதம்' என்று 'ஒழிக ஆல்கபோன் கூட்டம்' என்று 'ஒழிக ஆரிய ஆதிக்கம் என்று உங்களின் ஏகோபித்த குரலுக்கு இன்றைய அதிகார வர்க்கம் செவி சாய்த்துத்தான் ஆகவேண்டும். ஏன்? உங்களின் உள்ளப் பிரதிபலிப்பு அவர்கள். உங்களின் சிருஷ்டிப்பிண்டங்கள் அவர்கள்.

செய்வீர்களா? செய்யத்தவறினீர்களேயாயின் இந்த நாட்டிலே ஒருஅரசியல் தலைவன் இருக்கமுடியாது. ஒரு அரசியில் கட்சியிருக்க முடியாது. என்றோ எப்பவோ நீ வட்டிக் கொள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா...? அந்த காலத்திற்குத்தான் நாம் செல்ல வேண்டும்.

ஆரியக்கூட்டம் சூது அறியாததல்ல. சாக்கடையிலே உற்பத்தியாகும் புழுக்களைப்போல சூழ்ச்சியிலேயே பிறந்தது ஆரியக் கூட்டம். ஆகவே பல பெயருடன் உலவும் இந்த இந்து மகா சபை என்ற ஆரியக் கூட்டத்தை அடக்க அரசாங்கம் பல வழிகளையும் கையாள வேண்டும். ஒரு ராஸ்டிரீய ஸ்வயம் சேவக் ஸ்தாபனத்தை மட்டும் சட்ட விரோத ஸ்தாபனமாக மாற்றி விட்டால் போதாது? இது செய்த நாசகாரச் செயலையே வேறு பெயருடன் செய்யும்—செய்து கொண்டிருக்கும்—இந்து மகா சபையையும், பிராமண சேவா சங்கத்தையும் சட்ட விரோதமான ஸ்தாபனங்களாக மாற்ற வேண்டும்.

ஆனால், தோழர் பட்டேல் துரை அவர்கள் இந்து மகா சபையைச்சட்ட விரோதமானதாகமாற்றக்கூடாது என்கிறார். சட்ட விரோதமானதாக மாற்றக் கூடாது என்று தோழர் பட்டேல் கூறும்போது 'இந்த நாட்டிலே ஒரு மகாத்மா மட்டும் கொல்லப்பட்டது போதாது, இன்னும் பல தலைவர்கள் கொல்லப்படவேண்டும், இந்த நாட்டிலே இன்னும் பார்ப்பன ஆதிக்கமும் நாசகார செயல்களும் அதிகமாக வேண்டும். இந்திய டொமினியனை இந்துக்களின் நாடாக மாற்றவேண்டும்'' என்ற அவரின் நினைப்பு நன்றாகத் தொக்கி நிற்கிறது. இவைகளை யெல்லாம் மனதில் நினைத்துக் கொண்டுதான் பட்டேல் பேசுகிறாரோ என்றுகூடத்தோன்றுகிறது. இந்து மகாசபையைச் சட்ட விரோதமானதாக அறிவிக்கா விட்டால், சட்டவிரோதமானதாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ராஷ்ட்ரீய சங்கத்திலிருக்கும் பார்ப்பனர்கள் எல்லாம் இந்துமகா சபைக்கு வீடு குடிபோவதைப் போல ஒரு நிமிடத்தில் வந்துவிட முடியும் என்பதை பட்டேல் துரை அவர்கள் உணர்ந்திருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. ஒரு நாட்டை ஆளும் மந்திரிக்கு இவ்வளவு அறிவுகூட இருக்காது என்று யாரும் நினைக்கவும் மாட்டார்கள்.

ஹிந்து மகாசபையைச் சட்ட விரோதமானதாகப் பிரகடனப் படுத்தா விட்டால் காந்தியார் மறைவைக் குறித்துப் பட்டேல் துரைக்குத் துளிகூட வருத்தம் இல்லை என்பது தான் தொனிக்கிறது. காந்தியாரின் மறைவைக் குறித்தும் நாட்டின் சீர்கேட்டைக்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# இந்து-முஸ்லிம் ஒற்றுமை!

[ஓ. எம். எஸ். மணி]

★

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு; இது வெறும் வாய் வேதாந்தம். செய்கை முறையோ, கொலை, கொள்ளை, அடிதடி, தீ, திருட்டு இந்த மாதிரி செய்கையே இன்று நம் நாட்டில் குடி கொண்டுள்ளது. இச்செய்கை வேதனை தரக்கூடியது. வேற்று நாட்டார் வெறுக்கக் கூடியதும் கூட. உலகம் புகழும் உத்தமன் "காந்தி மகாத்மா" மறைந்தார் என்றால்; எதனால் மறைந்தார்? ஒற்றுமையை உணராத பார்ப்பனீய மதவெறி பிடித்த மக்களால் தான் மறைந்தார்.

'மதம் மக்களுக்கு அபின்போன்றவை' என்ற நல்ல கொள்கையை உணர்ந்தார் மகாத்மா! நாட்டிலுள்ள நய வஞ்சகர்களால் நசுக்கப் பட்டார் காந்திமகான். "சாதிமத பேதமில்லா சாத்வீகன் வாழ்க!" என்று பலர் [தன்னிலைமை எப்படியோ] பாட்டுப் பாடினார்கள். பரலோகத்திற்கு அனுப்பினார்கள் சாந்தமூர்த்தி காந்திமகானை.

"எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு" இது பாரதியாரின் பாட்டுத்தான். நாமும் நன்கு பாடிக் கொள்கின்றோம். நடப்பதோ 'இந்து—முஸ்லிம்' சலியாத சண்டை. மகாத்மா மறைந்து ஒரு திங்கள் கூடச் சரியாக முடியவில்லை. அதற்குள் எத்தனையெத்தனை இடங்களில் காரணமில்லாத இந்து-முஸ்லிம் சண்டைகள்? எவ்வளவு பொருள்கள் நஷ்டம்? எத்தனை குடும்பங்களுக்குக் கஷ்டம்? எத்தனை முஸ்லிம் மக்களுக்கு ஆற்ற முடியாத துன்பம்? நம் நாடு நல்ல நாடு என நம்பி வாழ்ந்த முஸ்லிம் மக்கள் இன்று எத்தனை பேர் மகாத்மா மறைந்தார், நாம் அனைவரும் மாபெரியமனவேதனைக்குள்ளாகி உணவிழந்து, உடையிழந்து, பொருளிழந்து, இருக்க இடமின்றி வதைகின்றோம் என கூக்குரலுடன் கூறி, "ஏ! காந்தி மகானே!! ஏன் மறைந்தாய். எங்கள் ஒற்றுமைக்காகத் தானே அன்று நீ உண்ணா நோன்பு கொண்டாய். எங்களுக்கும் எங்கள் தோழர்கள் இந்துக்களுக்கும் தானே. 'உடலும் உயிரும் போன்ற' ஒற்றுமையைக் காண விரும்பினாய். அதற்குள்ளாக ஏன் மறைந்தாய். மகாத்மாவே! நாங்கள் இங்கு இந்துக்கள் எனக் கூறிக்கொள்ளும் இந்த மக்களால் இன்னலுறுவது என்று தான் ஒழியுமோ? மணமாகாத மங்கைகளையும், மனைவியையும், பச்சிளங் குழந்தைகளையும், கையில் இழுத்துக் கொண்டு இவர்களால் தொல்லைப்படுவதை எப்படி நாங்கள் சகிப்போம், என எண்ணி, எண்ணி ஏங்கும் முஸ்லிம் மக்களின் மனத்துயரத்தை நாம் அறிவோமோ? அதை அறியும் அளவிற்கு அறிவில்லை நமக்கு. ஆதாரமற்ற அடிதடி. அர்த்தம் அற்ற காலித்தனம். இவற்றிற்கு முதலிடம் கொடுக்க நம் படிப்பற்ற மக்களுக்குத் தெரியும்.

சொந்தப் புத்தியும் இல்லை. சொல்கின்றவர்கள் புத்தியையும் ஏற்றுக் கொள்வதில்லை. என்ற கொள்கை இருந்தால் நாடு நயவஞ்சகர்களுக்குத் தான் இரை. 'பாவம் ஓரிடம் பழி ஓரிடம்' என்ற பழமொழிக்கிணங்க சாந்த மூர்த்தி காந்தி மகானைக் கொன்றது மத வெறிபிடித்த ஓர் இனம். அறிவு என்பது அணுவளவும் இல்லாத இந்த இந்துக்களால் இன்னல் அடைவது முஸ்லீம் மக்கள் என்ற மற்றோர் இனம்.

காங்கரஸ் திராவிடத் தோழர்களே! மக்களே! சிந்தியுங்கள். காந்தி மகான் வேண்டிக் கொண்டது ஒற்றுமை. அதுவும் இந்து-முஸ்லிம் ஒற்றுமை. இந்தியா மந்திரி இன்றும் மிக, மிகவேண்டிக் கொள்ளுவது அன்பு, அடக்கம், ஒற்றுமை. திராவிடத்தின் தனிப் பெருந் தலைவர் பெரியார் அவர்களும் அந்நாள் கொண்டு இந்நாள் வரை வேண்டிக் கொண்டதும், இனி எந்நாளும்விரும்புவதும்மேல்கண்ட ஒற்றுமையே. கோடி கோடியாக 'காந்தி' சிலையை வைத்தாலும் கடைசி காலம் வரை கவனத்திற்குக் கொண்டுவர முடியாது. வீட்டுக்கொரு சிலைவைத்திருந்தாலும் வீண்தான் நம் நாடு! நம் மதம்!! இவைகளின் பெயர்கள் அனைத்தும் அர்த்தம் இல்லா ஆபாசமான தலைப்பு. இதை அறவே அழித்து "பொறுமையின் பொக்கிஷம், அன்பின் அவதாரம், அறிவு புகழ் உச்சியின் எல்லை கண்ட கருணைக் கடல்" எனப்படும் காந்தியார் பெயரால் மாற்றி வழக்கத்தில் கொண்டுவா! காந்தியாரின் புகழ் மறையுமா? மறைய முடியுமா? பார்ப்போம்.

ஆட்சியாளர்கள் இங்கு குடியேறியுள்ள அன்னியரிடம் ஆதரவு கேட்காமல் அவசியம் அத்தலைப்புடன் நாடு நடைபெறத் திட்டமாகச் சட்டம் செய்யவும். அதுவே ஆட்சியாளர்கள் காந்தியாருக்குச் செய்யும் காணிக்கை! நன்றி அறிதலும்கூட! மக்களும் இவ்வாறு செய்ய முன்வராமல் இழிவற்ற இந்து-முஸ்லிம் சண்டையிலிறங்கின! காந்தியாரே!! நீர் என்னென்னமோ சொன்னீர். 'ஒற்றுமை உயர்வு தரும்' என்று தினம் தினம் கூறினீர். கூறுங்களேன். நாங்கள் விட்டோமா பார்! எந்த மக்களையும் எங்கள் பலம் உள்ளவரை, காங்கரஸ் பெயரைச் சொல்லி, உங்கள் பெயரைச் சொல்லிக் காலித்தனம் புரிகின்றோம் எனச் செய்வது காந்தியாரின் புகழை இகழ்வதைவிட வேறென்னவாகும். எனவே நடந்த நாசமற்ற செய்கையை மறந்து, கடந்ததை கவனத்தில் வைக்காமல் விட்டு விட்டு ஒற்றுமை! ஒற்றுமை!! ஒற்றுமை!;! எனக்கூறி கவி பாரதிதாசன் கூறிக்காட்டிய

"மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா"

என்பதை எண்ணிப் பார்த்து மக்கள் ஒரே குலமாய் வாழ்வதே முறை, நன்று, நேர்மை என எண்ணி அனைவரும் இனி ஒன்றே என்ற புனிதமான இன்பவார்த்தையை மறக்காமல், மறைக்காமல் செய்து காட்டல் வேண்டும். "ஒற்றுமை நீங்கில் நம்அனைவருக்கும் தாழ்வு" என்பதை எண்ணி பன்முறை சொல்லி, நன்முறையில் செய்து காட்டல் வேண்டும். அதுவே நாம் காந்திமகானுக்கு தரும் காணிக்கை.

ஆட்சியாளர்கள் அவருக்கு அளிக்கும் வெகுமதி.

உலகோர் நமக்குத் தரும் பரிசும் கூட.

---

"ஊர் சுத்தி"

அடுத்த வாரம் வெளிவரும்

---

★

## காந்தி தோற்றம்.

மதுரை நகரசபை ஊழியர் தோழர் எம். பிச்சை அவர்களின் துணைவியாருக்கு 30-1-48ம் நாள் பிறந்த ஆண் மகவுக்குக் "காந்தி" எனப் பெயரிடப் பட்டிருக்கிறது. இதன் நினைவாக ரூ. 1 நன்கொடை வரப்பெற்றோம்.

## இளங்கோவன்.

வேளாங்கண்ணித் தோழர், வீ. க. சொ. வெள்ளிமலை—புட்பவல்லி அவர்களுக்கு 16—2—48-ம் நாள் பிறந்த ஆண் மகவுக்கு இளங்கோவன் என்ற பெயர் சூட்டப் பெற்றது. இதன் நினைவாக வந்த ரூபாய் ஒன்றும் வரப்பெற்றோம்.

## செல்வம்.

குடந்தைத் தோழர் எஸ். டி. பால சுப்பிரமணியம்—கோவிந்தம்மாளுக்கு 31—12—47-ம் நாள் பிறந்த ஆண் மகவுக்குச் செல்வம் எனப் பெயரிடப் பெற்றது. இதன் நினைவாக வந்த ரூபாய் ஒன்றும் வரப் பெற்றோம்.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போடு (உ)டனுறைந் தற்று.
[குடங்கர்—குடிசை] —திருவள்ளுவர்.


# குடி அரசு

21—2—48 சனிக்கிழமை.


## பெரியார்.

★

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், கீழ்க்கண்டபடி சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

பிப். 22—திலக்கோட்டை (மதுரை ஜில்லா மாநாடு)
24—வேடிச்சிபாளையம் (கரூர்)
25—லால்குடி
26—கீழையூர் (நாகை)
27—காரைக்கால்
28—நாகூர்
29—புவனகிரி
மார்ச்சு. 1—குறிஞ்சிப்பாடி (தெ. ஆ. ஜில்லா)

## பார்ப்பனர்களே! கனவு பலியாது.

★

காந்தியாருடைய முடிவிற்குப் பின் அவருடைய பிரிவை மறப்பதற்காக என்று, இந்து மதச் சாஸ்திர சம்பிரதாயங்களின்படி பதிமூணாம் நாள் அஸ்தி கரைக்கும் சடங்கு இந்திய யூனியன் முழுவதும், எந்த அளவு இந்த மத வெறிக்கு இடம் கொடுக்க முடியுமோ அந்த மாதிரியான நடவடிக்கைகளால் நடந்து முடிந்திருக்கிறது. காந்தியாரைப் படுகொலை செய்தவன் ஒரு பார்ப்பனன்—இந்துமத சாம்ராஜ்ஜிய வருணாச்சிரம வெறியன் என்கிற கொடுமையை எப்படி மறைக்கிறது என்று ஏங்கிக் கொண்டிருந்த இந்த நாட்டுப் பார்ப்பனர்களும், பார்ப்பனீயத்திற்கு ஒத்தாசையாக இருந்தே வயிற்றுப்பிழைப்பையும், கவுரவத்தையும் மற்ற நடவடிக்கைளையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்கிற நிலைக்கு வந்து விட்ட பக்தர்கள், தொண்டர்கள், தலைவர்கள், தியாகிகள், மந்திரிகள் என்பது போலப் பல முத்திரைகள் குத்திக் கொண்டவர்களும், பிரபுக்கள், ஜமீன்தார்கள், கள்ள மார்க்கட் வியாபாரிகள் என்கிற பெயர்களிலிருக்கிற பகற் கொள்ளைக்காரர்களும், ஆச்சாரியர்கள், சுவாமிகள், மகந்துகள் என்கிற பெயர்களிலிருக்கிற தீவட்டிக் கொள்ளைக்காரர்களும் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு "படி தாண்டாத பக்தர்களாக" ஆகிப் பார்ப்பனீய மதத்திற்கு இப்போதைய நிலைமையில் எவ்வளவு பாதுகாப்புச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து விட்டார்கள். இந்த நடவடிக்கைகள் மறைந்த பெரியார் காந்தியாருக்கு மரியாதையைச் செய்வதாகும் என்று சொல்லப்படுவதை நாம் ஒப்புக்கொண்டாலும், இந்தக்காரியத்தின் ஆடம்பரங்களால் பார்ப்பனீயம் எப்படி உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டது? அதனுடைய சதிச் செயல் நிறைவேறுவதற்கு மேலும் எந்த மாதிரிக் காரியங்கள் செய்து வருகின்றது? என்பதைத்தான் இங்கு எடுத்துக் காட்டுவதற்கு ஆசைப்படுகிறோம்.

பார்ப்பனீய மதக்கொடுமையை-வஞ்சகத்தை-மானத்தை யழிக்கும் செயலை-கொள்ளையும் கொலையும் செய்யும் கொடிய போக்கினை இந்தத் திராவிட நாட்டில் பிறந்து மறைந்த ஒவ்வொரு அறிவாளியென்று பெயர் எடுத்தவர்களும், அந்தந்தக் காலத்தில் எந்தெந்த அளவு அவர்களால் தெரிவித்திருக்க முடியுமோ அப்படி அப்படித் தெரிவித்துத்தான் போயிருக்கிறார்கள் என்பதையும், அவைகளெல்லாம் வெறும் பக்திக்குரிய, பூஜைக்குரிய, பாராயணத்திற்குரிய ஏட்டுச் சுரைக்காய்களாக ஆகிவிட்டன என்பதையும், அவற்றைத் தெரிவித்தவர்கள் சித்தர்கள் அடியார்கள், வள்ளலார்கள், மகான்கள் என்கிற பெயர்களுக்குரியவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதையும், இந்தப் பெரியார்களுடைய கருத்துகள் மக்களுக்குப் பிரயோசனப்படாமல் போவதற்குப் பார்ப்பனீயம் என்னென்ன குள்ளநரிச் செயல்கள் செய்ய வேணுமோ, அதையெல்லாம் செய்து விட்டது என்பதையும் நாம் பல முறையும் விளக்கி வந்திருக்கிறோம்.

இந்தப் பார்ப்பனர்களின் மோசடித்தன்மை தொலையவேண்டுமானால், இந்த நாட்டு மக்களை மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து தடுத்தாகவேண்டுமானால், மக்கள் எல்லோரும் ஓரே குலம் என்கிற நல்லுணர்ச்சியைக் கைக்கொள்ளவேண்டுமானால், உலகத்தின் மற்ற நாடுகளைப்போல நாமும் முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டுமானால், முதலில் மக்களுக்கிடையே பரப்பப்பட்டிருக்கும் மதவுணர்ச்சி வேர்களுக்கு வெந்நீரை ஊற்றவேண்டும்; குருட்டுத்தனமான மதவுணர்ச்சியை வளர்க்கும் பண்டிகைகள் வெறுக்கப்படவேண்டும்; அயோக்கியச் செயல்களுக்கெல்லாம் வளர்ப்புப் பண்ணைகளாயிருந்து, மதப் போர்வையைப் போர்த்திக்கொண்டிருக்கும் மடாலயங்கள் எல்லாம் மக்களின் சொத்தாக ஆகவேண்டும்; காந்தியார் சொன்னதுபோல் விபசார விடுதிகளாயிருக்கும் கோவில்கள் எல்லாம் கோயில் பூனைகளுக்குப் பால்பண்ணையாக இல்லாமல் மக்களுக்கு அறிவுப்பண்ணையாக ஆகவேண்டும்; என்கிற கிளர்ச்சியை இந்த நாட்டில் கல்லெறிக்கும், சாணிவீச்சுக்கும், செருப்பு வீச்சுக்கும் இடையிலும், அக்கினித் திராவகம் வீசுதல் நெருப்பு வைத்துப் பந்தலை எரித்தல், சேலையையுரிந்து மானபங்கப்படுத்துதல் என்கிற காங்கரசார் ஆட்சியில் நடந்த அக்கிரம அட்டூழியச் செயல்களுக்கிடையிலும், நமது தலைவர்களும், தொண்டர்களும், தாய்மார்களும் எந்தவிதமான சொந்தப் பிரயோஜனத்தையும் கருதாமல் விடாது செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும் திராவிடநாடு நன்கறியும்.

பார்ப்பனர்களின் அக்கிரமமான நடத்தையைப் பொறுக்கமுடியாமல், மனிதப் பண்பின்மீது வைத்த நம்பிக்கையினால், இந்த மாதிரியான கிளர்ச்சி வலுவாக 25 வருடங்களாகவே நடந்துவந்தாலும், இந்த நாட்டு மக்களை ஏமாற்றி வாழ்வதையே தொழிலாகக்

கொண்ட பார்ப்பன வர்க்கத்தின் பிரதிநிதிகளான 'இந்து' 'சுதேச மித்திரன்' என்கிற விஷ ஊற்றுகளும், அவைகளின் கிளைகளான 'விகடன்' 'கல்கி' போன்ற விஷ சாக்கடைகளும், பாஷியங்கள், பட்டாபி ராமன்கள் வரதாச்சாரிகள், வைத்தியநாதர்கள் என்கிற விஷக் கொசுக்களும் பரவித் தீண்டிக் கொட்டி வருகிற கொடுமைகளாலும், நம்முடைய இனத் துரோகிகளான கவிதாமணிகள் ரிப்பேர் செய்யும் பண்டிதர்கள் .என்பவர்கள் அவர்களோடு கூடிக்கொண்டு அவர்கள் வீசி எறியும் எச்சிலை சுவைத்து ருசித்து, ரஸித்துக்கொண்டு முன்னோடும் பிள்ளைகளாய் இருந்து வ்ருவதாலும், மக்களுடைய சிந்தித்துணரும் திறனை எல்லாத் துறைகளிலும் பங்குபோட்டுப் பறிமுதல் செய்து வந்த துணிவினாலும் நம்மையே நாஸ்தீகர்கள் என்றும், தேசத்துரோகிகள் என்றும், வகுப்புவாதிகள் என்றும் கூசாமல் பார்ப்பனர்கள் பட்டம் சூட்டினார்கள்.

தீவிர வாதிகள், அதி தீவிரவாதிகள் என்று அரசியலில் பெயர் எடுத்தவர்கள் எல்லாம், இந்த மதக் கொடுமையை அறிந்தும் கூடவெளியில்சொல்வதற்குஅஞ்சி வாழ்ந்த காலத்தில், மதவுணர்ச்சியைப் பெருக்குவது, வளர்ப்பது நல்லதல்ல. மதவெறி நாட்டிற்குப் பெரிய தீமையைச் செய்யும் என்று நாம் கூறியபோது நம்மை நாஸ்தீகர்கள் என்று சொன்னதற்கு ஆக நாம் பின்வாங்கவில்லை. ஏன்? எப்படியாவது உண்மை வெளிப்படத்தானே வேண்டும்? எவ்வளவு காலத்திற்குத்தான் புரட்டர்களுடைய திருகுதாளங்கள் வெற்றியடையும்? என்று எண்ணிய உறுதியான நம்பிக்கையினாலேயே. நம் நம்பிக்கை வீண்போகவில்லை. பெரியார் காந்தியாருடைய படுகொலைக்குப் பிறகு, இந்த நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும், ஒரே குரலாக மகாத்மாவை மதவெறி அழித்து விட்டது. மதவெறி ஒழிக! மதவெறியே மாண்டு போ! என்று கூறுவதைக் கேட்க, "அப்பாடா! இப்பொழுதாவது இந்தப் பத்திரிகைகளுக்கு ஞானம் வந்து விட்டதே" என்று, நம் கோரிக்கை வெற்றி பெற்றதை எண்ணிப்பெருமூச்சு விட்டாலும், இவர்களுக்கு இந்தப்புத்தி வருவதற்காகக் காந்தியாரா படுகொலையடைய வேண்டும்? என்பதையும், வந்த புத்தி நிலைத்திருந்து அதற்கான வழிகளில் ஈடுபட வேண்டாமா? என்பதையும்தான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு எண்ண வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

இன்றைக்கு "மதவெறி" "மதவெறி" என்று முழக்கமிடுகின்ற பத்திரிகைகள், அந்தமதவெறியை, விஷ நீரை ஊட்டுவதற்காக என்னென்ன முறைகளைக் கையாண்டது? எவ்வளவு துணிந்து அயோக்கியத்தனமாகப் பொய்ப் புளுகுகளை மூட்டை மூட்டையாகப் பரப்பியது? இதற்கு சித்திரங்கள்,

# காந்தியார் மறைவுக்கு அநுதாபக் கூட்டம்.

## 29—2—48.

★

காந்தியார் அவர்கள் இயற்கைக்கு விரோதமாக மரணமாக்கப்பட்டது குறித்து அநுதாபப்படவும் கொலைச் சம்பவத்தைக்கண்டிக்கவும் திராவிடர் கழகத்தின் சார்பாக ஒவ்வொரு ஊரிலும் திராவிடர் கழகத்தார் அநுதாபம்—கண்டனம் கூட்டம் 29-2-48 ஞாயிற்றுக்கிழமையன்று ஏற்பாடு செய்யவேண்டியது. கூட்டத்திற்கு ஆடம்பரம் கூடாது. செலவு கூடாது. ஒலி பெருக்கி கூடாது. சொற்பொழிவு கூடாது. தலைவர் அல்லது அவரால் அழைக்கப்பட்டவர் பின்வரும் தீர்மானத்தைப் படித்ததும், பொது மக்கள் எழுந்து நின்று ஒரு நிமிஷம் மவுனமாக இருந்ததும் மிக அமைதியாகப் பிரிந்துவிட வேண்டியது:—

### காந்தியார் மறைவுக்கு அநுதாபத் தீர்மானம்.

"சென்னை மாகாணத்தில் உள்ள திராவிடக்கழகத்தின் கிளைஸ்தாபனமாகிய............ஜில்லா..............ஊர் திராவிடக் கழகத்தார் சார்பாகக் கூட்டப்பட்டதும் திராவிடக் கழகத்தவர்கள் பெரிதும் கூடி உள்ளதுமான இக்கூட்டமானது உலக மக்களால் போற்றப்பட்டவரும் இந்திய தேசியக் காங்கரஸ் நடப்புக்கு மூலகாரணமாயிருந்து அதை நடத்தி வந்த முக்கிய தலைவரும், சத்தியம், அன்பு, ஒற்றுமை, முதலிய உயர் குணங்களைச் சதா சர்வகாலம் மக்களுக்குப் போதித்து வந்த உத்தமரும், ஆன ஒப்பற்ற பெரியார் காந்தியார் அவர்கள் இயற்கைக்கு மாறான தன்மையில் மரணமடைந்தது குறித்துத் தனது ஆழ்ந்த துக்கத்தையும் அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இம் மரணத்துக்குக் காரணமாக இருந்த கொலை பாதகனையும் அவனுக்குப் பின்னால் ஆதரவாகவும், நடத்துபவர்களாகவும் இருந்த ஸ்தாபனங்களையும், மக்களையும் வெறுப்புக்காட்டிக் கண்டிக்கிறது.

இந்தப் பரிதாபகரமான நிகழ்ச்சியின் விளைவை படிப்பினையாகக் கொண்டு இந்நாட்டு மக்கள் யாவரும் ஜாதி, மத, இன வேறுபாடு காரணமாய் வேற்றுமை உணர்ச்சி இல்லாமல் ஒன்றுபட்டு வாழ்வோமாக!

அன்பும், அறிவும், சத்தியமும், என்றும், எங்கும் நிகழ்வதாகுக. அவையே யாவற்றிலும் வெற்றி பெறுவதாகுக".

இத்தீர்மானத்தை மத்திய நிலையத்துக்கும், காந்தியார் மகன் தோழர் தேவதாஸ் காந்திக்கும், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்கும் அனுப்ப வேண்டியது.

செய்தியை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பவும்.

**ஈ. வெ. ராமசாமி.**

[குறிப்பு:— மேற்கண்டவாறு, கூட்டம் நடந்த ஊர், தலைமை தாங்கிய தலைவர் பெயர் ஆகிய இவைகளை நமக்கு எழுதியனுப்ப வேண்டுகிறோம். ஆ—ர்.]

இசைகள், சினிமாக்கள் செய்தி ஸ்தாபனங்களை எப்படித் துணையாகச் சேர்த்துக் கொண்டது? என்ற இவைகளை யெல்லாம் கொஞ்சமும் எண்ணிப் பாராமல் இப்போது மதவெறியே! மாண்டு போ என்று போடுகிற கூச்சலால் ஏற்படப் போகும் பிரயோசனமென்ன? முந்தின போக்கு தவறான பாதை என்பதை உணரா விட்டால் இப்பொழுது "மத வெறி" "மத வெறி" என்று சேர்ந்து கோவிந்தா போடுவதினுடைய அர்த்தமென்ன?

உண்மையாகவே மத வெறி கொடுமையானது என்பதை இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் உணர்ந்தார்கள் என்றோ, பார்ப்பனப் பத்திரிகைகள் தேசியப் பத்திரிகைகள் தெரிந்து கொண்டு விட்டன என்றோ எவராவது சொல்ல முடியுமா? பார்ப்பனர்கள் உணரவில்லை, பார்ப்பனப் பத்திரிகைகள் தெரிந்து கொள்ளவில்லை என்ற நிலைமை இருந்தால் கூடப் பாதகமில்லை. ஒருபக்கம் மத வெறி மதவெறி என்று கூப்பாடு போட்டுக் கொண்டே, மற்ற ஒன்பது பக்கங்களிலும் மதவெறியைப் பெருக்குவதற்கான காரியங்களையே வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ,செய்கிறதென்றால் இந்தப் போக்குக்கு ஒரு முடிவில்லையா? ஏ! பார்ப்பனீயமே! இந்த நாட்டையும் ரத்தக்கறை படியச் செய்ய வேண்டும் என்பதிலே ஏன் உனக்கு இவ்வளவு ஆசை? என்பதை நம்மால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"திராவிடர் கழகம் ஒரு வகுப்புவாத ஸ்தாபனம். பார்ப்பனர்கள் மீது துவேஷத்தைப் பரப்பி வருகிறது. அதை இந்த நேரத்திலே ஒழித்துக்கட்டவேண்டு" மென்கிறது இந்து. பேஷ்! ஒரே கல்லால் இரண்டு பட்சிகளை-ஏன்-மூன்று பட்சிகளை வீழ்த்தும் திட்டம் என்று அது உள்ளம் மகிழலாம். காந்தியாரைச் சாகடித்ததற்கு ஏதோ சில பார்ப்பனர்களையாவது பலி கொடுக்கவேண்டியிருக்கிறதே, இந்தப் பலியினாலேயே ஏன் திராவிடர் கழகத்தையும் வீழ்த்திவிடக்கூடாது? இது தான் பார்ப்பனர்களின் விருப்பமும் திட்டமும். இந்தச்செயலுக்கு ஒத்துழைப்போமா? வேண்டாமா? எந்த அளவு ஒத்துழைக்கலாம்? எப்படி இதை வைத்துக் கொண்டு பயமுறுத்தலாம்? என்கிற ஆலோசனையில் ஈடுபட்டிருக்கின்றது இன்றையத் 'திராவிடர்களை' அதிகமாகக் கொண்டிருக்கும் நம் "திராவிட நாட்டு மந்திரிசபை". மந்திரி சபை மனம் வைத்தால், "ஒரு நாமெழுத்து எழுதி விட்டால் போதுமே" என்று எதிர்பார்க்கின்றார்கள் நம் அருமைப் பார்ப்பனர்கள். எதிர்பார்க்கட்டும்! திராவிடர் கழகத்தை ஒழித்து விடுவதற்காக எழுதுகிற அந்த நாலு எழுத்துக்களே, மந்திரி சபையையும் கவிழ்த்து விடுவதற்குப் போதுமானது என்று எண்ணுகிறது அவர்களின் சூழ்ச்சி படிந்த மனம். அது தான் அவர்கள் கருதுகிற மூன்றாவது பட்சியாகவும் இருக்கலாம்.

நாம் பார்ப்பனர்களுக்குப் பல முறை கூறியிருக்கிறோம். இது மனு மாந்தாதா காலமல்ல! உங்களுடையபேடித்தனமான,மறைந்து தாக்கும் வேலைகள் எல்லாம் திராவிட நாட்டைப் பொறுத்த வரையில் பயன்படாது! உங்களுக்குச் சில விபீஷணர்கள் அகப்பட்டாலும் கடைசிவரைக்கும் விபீஷணர்களாயிருக்க எந்த ஒரு திராவிடனும் அகப்படமாட்டான்! அப்படி அகப்பட்டாலும் அவன் ஒரு திராவிடனாகவும் திராவிடனுக்குப் பிறந்தவனாகவும் இருக்கமாட்டான் என்றே எதிர்கால வரலாற்றிலே இடம் பெறுவான்! அப்படியே சிலர் அகப்பட்டாலும், அவர்களுடைய துணையைக் கொண்டு திராவிடர்களை அழித்து விடலாமென்றுமனதினால்எண்ண வேண்டாம்! ஒவ்வொருத்தனும் ஏன் நான் தேவடியாள் பிள்ளை? ஏன் நான் நாலாம் சாதி? அய்ந்தாம் சாதி? இந்த நாட்டை என் முன்னோர்கள் ஆளவில்லையா? இப்பொழுது நான் பாடுபடவில்லையா?உழைக்கிறவன்நான்.அய்க்கியம், தேசியம், மதம், கடவுள், வெங்காயம் என்கிற பெயர்களால் மேனி வாடாமல் உண்ணுகிறவன் நீயா? என்று தாழ்த்தப்பட்ட தோழர்களிலிருந்து உயர்த்தப்பட்டதாக நடித்துக்கொண்டிருக்கிற மந்திரிகள்வரை கருதிக்கொண்டிருக்கிற காலம் இது.

நீங்கள் சொல்லி வந்த "தேசத் துரோகிகள்" என்கிறபட்டம் இனி நாட்டில்செலவாணியாகாது என்பதைத் தெரிந்து கொண்டு, வகுப்புவாதிகள், வகுப்புத் துவேஷிகள் என்கிற பட்டத்தைத் தீவிரமாகக் கட்ட ஆரம்பித்திருக்கிறீர்கள்! இது நெஞ்சறிந்த பொய் என்று உங்களுக்குத் தெரியும்! வகுப்புத் துவேஷிகள் நீங்களா? அல்லது நாங்களா? இருந்தும் இந்த அபாண்டத்தைக் கண்ணை மூடிக் கொண்டு பரப்புகிறீர்கள்! "சொல்லுகிறவன் சொன்னாலும் கேட்பவனுக்குப் புத்தி எங்கே போச்சு" என்கிற பழமொழியைத் தெரிந்திருக்கும் நீங்கள்தான், அந்தப்பழமொழியை அறிந்திருக்கும் மந்திரிகளிடத்தில் தலையணை மந்திரம் செய்கிறீர்கள்! மெய்யாகவே நாங்கள் வகுப்புத் துவேஷிகள், உங்களை (பார்ப்பனர்களை) ஒழித்துவிட விரும்புகிறவர்கள் என்று கருதுகிறீர்களா? அது உண்மையாக இருந்தால், உங்களுடைய அட்டூழியமான அநீதிகளால் எத்தனை அக்கிரகாரங்கள் இதுவரை சாம்பலாகியிருக்கவேண்டும்? எத்தனை பேர்கள் நடுத்தெருவுகளிலேயே நாய்களைப் போலச் சாகடிக்கப்பட்டிருக்கவேண்டும்? எத்தனை பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்? வட நாட்டிலே நடந்த மிருகச் செயல்களை நாள்தோறும் கேட்ட இந்த நாட்டில், வகுப்பு வெறி திராவிடர்களால் பரப்பப்பட்டு வருகிற நிலை இருந்திருந்தால், உண்மையாகவே பார்ப்பனன் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு ஒரு புல் பூண்டு இங்கே இருக்க முடியுமா? ஏன் விபரீதமான முயற்சியில் இறங்குகிறீர்கள்! நீங்களே பார்ப்பனன், பிராமணன், புரோகிதன் என்று சொல்லிக்கொள்ளுவதிலே, அழைக்கப்படுவதிலே வெட்கப்படவேண்டும் என்று நினைக்கிறோமே தவிர, உங்களைக் கொன்றொழித்துவிட வேண்டுமென்ற எண்ணம், அதற்கான நடவடிக்கை எங்களிடத்தில் ஒரு காலத்திலும் இருந்ததுமில்லை! இருக்கப் போவதுமில்லை! இந்த நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வதாயிருந்தால், முதலில் பார்ப்பனீயத்துக்குப் பாதுகாவலாயிருக்கும் எங்கள் தாய்களையும், தந்தைகளையும், மனைவிகளையுமே கொலை செய்ய வேண்டியவர்களாவோம். ஏன்? நாங்கள் அழிய வேண்டுமென்று விரும்புவது பார்ப்பனர்கள் அல்ல. பார்ப்பனீயமே.

இதற்கு மாறுபாடாக உங்களுடைய இரத்தத்தைச் சிந்தாமலே, எங்களுக்குள்ளேயே மோதச் செய்து எங்களை யழிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வந்திருக்கிறீர்கள்! கூடிக் கெடுப்பது, அடுத்துக் கெடுப்பது, பேசிக் கெடுப்பது என்கிற முறைகளும், அதைக் கையாளுகிற ஆண்களும், பெண்களும் என்கிற நிலையும், இனிப் பிரயோசனப் படாது என்ற முடிவுக்கு வந்தவர்களாய், இந்து மகா சபை என்கிற பெயரால் ரா. சு. சே சங்கத்தில் ஆயுதங்களைச் சேர்த்தீர்கள்! கோவில்களுக்குள்ளேயே கவாத்துப் பழகினீர்கள்! இவற்றை உங்களால் மறுக்க முடியுமா?

மதவெறி, சாதிவெறி ஒழிய வேண்டும் என்பதிலே அக்கரையும், ஆசையும், உண்மையும் இருக்கிறதென்றால் என்ன செய்ய வேண்டும்?

மத சம்பந்தமான பேச்சுகளை, மதப் பெருமைகளைக் கூறுகின்ற நூல்களை, பேசுவதோ எழுதுவதோ, வெளியிடுவதோ, விற்பதோ என்கிற உங்களுடைய போக்கை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டும். பாரதக் கதைகளை எழுதி எழுதிப் பாமரர்களை வஞ்சிப்பதையும், இராமாயணக் கதைகளை எழுதி எழுதி இழிவுபடுத்தி வருவதையும், புராணங்களை எழுதி எழுதிப் புல்லறிவை வளர்ப்பதையும் விட்டொழித்து விடவேண்டும். நிர்வாணப் படங்களைப் போட்டு ஆடலழகிகளைக் காண்பித்து மக்களை ஆலயங்களுக்கு அழைக்கும் போக்குக்கு ஆதரவு அளிக்கக் கூடாது. மடச் சாமிகளைக் காட்டி மகேஸ்வரன் பெயரைச் சொல்லி மக்களை மந்த மதியினராக்குவதை விட்டொழிக்க வேண்டும். புராண நாடகங்கள், புராணச் சினிமாக்களை வளர்ப்பது புனிதமானது என்ற போக்கைக் கைவிட வேண்டும். எந்தக் கலைகளையுமே இந்த நாட்டுப் பழங்குடி மக்களின் வாழ்வைக் கெடுக்கும் நாசக் கருவிகளாகக் கையாளப்படுவது வெறுக்கப்பட வேண்டும். ஜாதிக்கொரு நீதி என்ற இந்துலாவை எடுத்துவிட உறுதி வேண்டும். ஒத்த தகுதிக்கு எல்லா மக்களையும் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமே தவிர, தகுதியில்லாத பலரை ஒரு பட்டியலில் சேர்த்துக், தகுதியும் திறமையும் என்று பேசுவதை மறந்துவிட வேண்டும். மத வேறுபாடுகளைக் காட்டும் மதச் சின்னங்களையணிந்திருப்பது, ஆபத்து என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். இந்த வேலையை இன்னார்தான் செய்ய வேண்டுமென்ற ஜாதிக் கட்டுப்பாட்டை இந்நாள் வரைதான் கூறிவந்தோம், இனி அந்தப் போக்கு உதவாது என்பதை உணர வேண்டும். காந்தியாரின் மரணத்தை அறிந்து கொள்ள முடியாத காந்தி சோதிடர் வர்க்கங்களையும், தேவபாஷை என்கிற செப்படி வித்தை செய்து வரும், முன்ஷிகள், சாஸ்திரிகள், புரோகிதர்கள் என்கிற புரட்டர்கள் வர்க்கங்களையும், வேதபாராயணப் பெயரால் விதவிதமான வேஷம் போடுபவர்களையும் அம்பலத்தில் இழுத்து வந்து அவர்களின் அக்கிரமங்களைவிளக்கிக்கூற வேண்டும். மக்களின் உழைப்பை, செல்வத்தை மதப் பெயர் கூறி எவர், எந்த முறையில் வஞ்சித்தாலும், அந்த இழிவை இன்றே ஒழிப்பதற்கு அக்கரை காட்டவேண்டும்.

இவற்றைச் செய்வீர்களா? இக்காரியங்களைச் செய்ய முன்வராமல் மேலும் மேலும் வருப்பு வெறியையேவளர்க்கப்போகின்றீர்களா? பதில்கூறவேண்டியதில்லை. நீங்கள் இனிச் செய்துவரும் செயல்களே நாட்டிற்குப் பதில்கூறுவதாக ஆகும். ஆனால் இந்து மத சாம்ராஜ்ஜியக்கனவை— வருணாச்சிரம வக்கிர ஆட்சிக் கனவை—எந்தப் பெயராலும், எந்த நடவடிக்கைகளாலும் உங்களால் இந்த நாட்டில் இனி ஏற்படுத்த முடியாதென்பது மட்டும் உறுதி.

## நகைச் சுவை அரசர் தந்தை ஆனார்.

கலைவாணர் நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் மதுரத்திற்கு 18—2—48 இரவு 10-50-மணிக்கு பெண் மகவு பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலத்துடனிருக்கிறார்கள்.

## ரூ. 2500 பத்திரிகையும் அச்சு கூடமும்.

கடந்த 6 வருடங்களாய் நடைபெற்று வரும் ஓர் சீர்திருத்த வாரப் பத்திரிகையும், அதன் அச்சுகூடமும் ரூ. 2500 விற்கப்படும். விபரத்திற்கு,

E. Sundara Rajan.
Cornation Town
Robertsonpet. P o
K. G. F.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்தும் மனம் நொந்து கிடக்கும் ஜவஹர் இந்த பட்டேலின் செயலுக்காக இன்னும் அதிகமாக வருந்தினாலும் வருந்துவார். இதன் காரணமாக இவ்விருவருக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதம் இன்னும் அதிகமாக முற்றினாலும் முற்றும். எங்களுக்குள் அபிப்பிராய பேதம் இல்லை என்று பொய் பேசிப் பசப்பிய பட்டேல் அந்தக் குட்டு வெளிப்படாமல் இருக்க இனிமேலாவது முயற்சிக்கவேண்டும்.

காந்தியார் மறைந்தபோது தன்மேல் அவர் எவ்வளவு அதிருப்தி கொண்டிருந்தார் என்பதைப் பட்டேல் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அவர் இருந்தபோது அவரை (மகாத்மாவை) மதியாமல் நடந்து முஸ்லிம்களைப் பழி தீர்த்துக்கொள்ளும் செயலில் ஈடுபட்டு அவரின் அதிருப்தியை வாரிக் கட்டிக்கொண்ட பட்டேல், அவர் இறந்த பிறகும்அவருக்கும், அவர் லட்சியத்துக்கும் விரோதமாகநடப்பது சரியல்ல. மகாத்மா மறைந்த சில தினங்களுக்கு முன் அவர் இருந்த உண்ணா விரதம் தனக்காகத்தான் என்பதைப் பட்டேல் துரை அவர்கள் அதற்குள் மறந்துவிட்டார் என்பதை நாம் நினைக்கக்கூட முடியவில்லை. ஆகவே பட்டேல் துரை அவர்கள் தனது இந்து மத வெறியை இனியும் வைத்துக்கொண்டிராமல் காந்தியார் மறைவோடு உதறித் தள்ளிவிடட்டும்! காந்தியார் மறைவு அவருக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்!

காந்தியார் கடைசிக் காலத்தில் மதவெறியின் கொடுமையை மக்களுக்கு அறிவிக்கத் தனதுஉயிரையே அர்ப்பணித்து விட்டார்.

இறந்த மகாத்மாவை எண்ணி நம் தென்னாட்டுத் திராவிடத் தேசியத் தோழர்கள் கண்ணீர் விட்டு விட்டால் மட்டும் போதாது. எந்த மத வெறியால் மகாத்மா கொல்லப்பட்டாரோ அதே மத வெறியை வெட்டிப் புதைத்துக் கொண்டுவரும் வேலையைத் தென்னாட்டில் செய்து கொண்டிருக்கும் திராவிடர் கழகத்தோடு ஒன்றுபட்டு விடவேண்டும். காங்கரஸ், திராவிடர்கழகம், கம்யூனிஸ்ட், சோசியலிஸ்ட் இக்கட்சிகள் அனைத்தும் காந்தியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு

மட்டும் ஒன்று சேர்ந்து அனுதாபக் கூட்டங்கள் கூட்டினால் மட்டும் போதாது. இந்த ஒற்றுமை என்றென்றும் நிலவ மற்ற கட்சித் தோழர்கள் தங்களின் மனதைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். அரசியலார் தனியாக ஒரு குழுவை அமைத்து அதிலே திறமை மிகுந்த பிரசாரகர்களை உண்டாக்கி அவர்களை நாட்டின் நாலாபக்கங்களுக்கும் செலுத்தி மதவெறியின் கொடுமைகளைப் பற்றியும் அவைகளினால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றியும் பிரசாரம் செய்ய வேண்டும். மதத்தின் கொடுஞ் செயல்களைப் பற்றி நாட்டிலே பிரசாரம் செய்து கொண்டு வரும் திராவிடர்கழகத்திற்குப் பொருள் உதவி செய்து அதனை மேலும் மேலும் தொண்டு செய்ய ஊக்கு விக்கவேண்டும்.

ஏதடா! கடைசியில் சுயமரியாதைக் கொள்கைகளிடமே அடைக்கலம் புகவேண்டியிருக்கிறது, பெரியார் ராமசாமி காட்டிய வழியே அவரின் பின்னாலேயே வாய் பேசாமல் மௌனமாகப் போக வேண்டியிருக்கிறது என்று நமது சகோதர தேசியத் தோழர்களும் அரசியலாரும் வீம்பைக் கைக் கொள்வார்களே யானால் பிறகு இந்த நாட்டிலே ஒரு மகாத்மாவல்ல......இன்னும் எத்தனை மகாத்மாக்கள் மத வெறிக்கு பலியாகப் போகிறார்களோ............

காந்தியார் மறைவு நம் தேசியத் தோழர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்! அந்தப் படிப்பினை இந்நாட்டு ஆல்கபோன் கூட்டத்தை அழித்தொழிக்கட்டும்!

## மன்னிக்க வேண்டுகிறோம்.

7—2—1948-தேதி குடிஅரசு தலையங்கம் "காந்தியார் முடிவு" தனிப் புத்தகமாக அச்சிடப்பட்ட காப்பிகள் பூராவும் தீர்ந்து விட்டமையால் பல தோழர்களின் விருப்பப்படி அனுப்ப இல்லாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம். மானேஜர்.

## வாழ்க்கைத்துணை.

நாகை வெளிப்பாளையத்தில் தோழர் வேலாயுதமும் தோழியர் சரஸ்வதியும் 11-2-48ம் நாள் வாழ்க்கை ஒப்பந்தம் படித்து வாழ்க்கைத் துணைவர்களானார்கள். இதன் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூபாய் ஒன்றும் வரப்பெற்றோம்.

## வெற்றி!

★

திருச்சி முனிசிபல் தேர்தலில் நமது இயக்கத்தோழர் என். சங்கரன் அவர்கள் வெற்றி பெற்றார். காங்கரஸ், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தோல்வியடைந்தனர்.

## சபாஷ்! சபா நாயகரே!

சென்னை பிப். 18—

இன்று பிற்பகல் சென்னை அசெம்பிளி மீண்டும் கூடியபோது கலவர ஒடுக்க மசோதா பற்றி விவாதம் தொடர்ந்து நடந்தது. ஆரம்பத்தில் மந்திரிகள் யாரும் வரவில்லை. ஆனால் விவாதம் மட்டும் நடந்துகொண்டிருந்தது.

15-நிமிஷங்கள் கழித்து மந்திரி தோழர் பக்தவத்ஸலம் வந்து சேர்ந்தார். தாமதமாக சபைக்கு வந்ததற்காக மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று சபாநாயகர் உத்திரவிட்டார்.

தோழர் பக்தவத்ஸலம்:—இந்த மசோதா சம்பந்தப்பட்ட மந்திரி டாக்டர் சுப்பராயன் தான். ஆகையால் நான் மன்னிப்புக்கேட்க வேண்டியதில்லை.

சபா நாயகர்:—முதலில் மந்திரிகள் யாரும் வரவில்லை. ஆகையால் நீங்கள் மன்னிப்புக்கேட்கவேண்டும். இதன் பேரில் தோழர் பக்தவத்ஸலம் சபையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

## போலீஸுக்கு மரியாதை கற்றுக்கொடுக்கவாம்.

பொது ஜனங்களுடன் மரியாதையாக பழகுவது எப்படி என்பதைப் பற்றி போலீஸ்காரர்களுக்கு அனுபவ சாத்தியமான பயிற்சி அளிப்பதற்காக, ஒரு சப்-இன்ஸ்பெக்டர் 11 கான்ஸ்டேபிள்களும் கொண்ட இரு கோஷ்டியை ஜப்பல்பூர் ஜில்லா போலீஸ் சூப்பரண்டு நியமித்திருக்கிறார். பிரயாணிகளுக்கு உதவும் நோக்கத்துடன் இந்த கோஷ்டிகள் ரயில்வே ஸ்டேஷனில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.


## உங்களுக்குத் தெரியுமா?

★

நமது கம்பெனியின் புத்தகசாலைக் கிளை சென்னையில் நிறுவப்பட்டிருக்கிறது.

விலாசம்:— 94-C. பிராட்வே, சென்னை.
(பிராட்வே டாக்கீஸுக்கு அருகாமையில்)

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

நாதன் கம்பெனி லிமிடெட், ஈரோடு.

## இதோ! பெரியாரில் பெரியார்.

திருவண்ணாமலை மாநாட்டில்
பட்டுக்கோட்டை
தோழர் K. V. அழகிரிசாமி சொற்பொழிவு.
விரைவில் வெளிவரும்.
விலை 6 அணா.

நாதன் கம்பெனி லிமிடெட்,
ஈரோடு. :: சென்னை.


## மனிதாபிமானத்தை வழித்தெறிவது மதம்.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அவற்றின் தொடர்ச்சியான ஒன்றையொன்று தழுவிய நிலையிலிருந்து நோக்குவதோடல்லாமல், அவற்றின் நகர்தல், மாறுதல், வளர்ச்சி, தோற்றம் மறைவு இவற்றின் நிலைகளினின்றும் கருதவேண்டும். மார்க்ஸின் தர்க்கம் தோன்றி வளரும் பொருள்களைப் பற்றியே கூறுகிறது. "மிகச் சிறிய பொருளிலிருந்து மிகப் பெரிய பொருள் வரையிலும், சிறு மணல் முதல் கதிரவன் வரையிலும் ஆதி உயிர்க் கண்ணறைகள் (Primary living cells) முதல் மனிதன் வரையிலும், இயற்கை, பாய்ந்து தோன்றுவதும் மறைவதுமானதும் ஓய்வின்றிநகர்வதும், மாறுவதுமாக ஓர் மாறாத நிலைமையிலுள்ளது" (Frederic Engels—Dialectics of Nature).

3. வளர்ச்சியைப் பற்றிக் கூறுங்கால், அற்பமான கட்புலன்களால் அறியமுடியாத சிறிய பரிமாணமாற்றம் முதல், காணக்கூடிய அடிப்படைப் பரிமாணமாற்றங்கள் (Quantitative changes) வரை செல்லும் மாறுதலே வளர்ச்சி எனக் கூறுகிறது. இவ் வளர்ச்சி திடீரெனவும் வேகமாகவும் ஏற்படுவது; ஒரு நிலையிலிருந்தும் மறுநிலைக்குத் தாண்டிச் செல்வது, தற்செயலாக ஏற்படுவதல்ல. அறியக் கூடாததும் மெதுவானதுமான குணமாற்றங்களின் (Qualitative changes) தவிர்க்க முடியாத முடிவே வளர்ச்சி. வளர்ச்சி மேலும் மேலும் செல்வது. அற்பத்திலிருந்து கலப்புக்கும், கீழிருந்து மேலும் செல்லக் கூடியது. நேர்க்கோடிட்டது போலச் செல்வதல்ல. இடை இடையே விட்டு விட்டுத் திடீரெனவும், பேராபத்துக்களைப் போலவும் புரட்சியினாலும் ஏற்படுவது. வளர்ச்சியின் விசைகள் ஒரு பொருளையோ, இயற்கைத் தோற்றத்தையோ, சமூகத்தையோ இயக்குவிக்கும் கதிகளின் (Processes) மறுப்புக்களி (Contradictious) னாலும் எதிர்ப்புக்களி (Opposites) னாலும் உண்டாகின்றன. இவ்வுலகிலுள்ள மரம் செடிகளும், பிராணிகளும், மனிதனும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து முன்னேற்ற மடைகிறது என்பதனை முதன் முதல் உலகுக்குஎடுத்துக் காட்டியவர் சார்லஸ் டார்வினே.

"இயற்கையின் தர்க்கம்" (Dialectics of Nature) என்னும் நூலில், பரிமாணத்தினின்றும் குணத்துக்குச் செல்வதே வளர்ச்சி என்னும் கருத்துக்குச் சான்று தருங்கால் எங்கெல்ஸ் கூறுகிறார்: "பௌதிகநூலில் ஒரு பொருள் இயல்பாகவாவது அல்லது செயற்கையினாலாவது ஒரு சில வழிகளில் நகர்வதால் ஏற்படும் பரிமாணமாற்றத்தின் விளைவாக, ஒவ்வொரு மாறுதலும் பரிமாணத்தினின்று குணத்துக்குச் செல்லுகிறது. எடுத்துக்காட்டாக, நீரின் வெப்பம் நீர்தன் நிலையிலிருக்கும் போது பயன் தருவதில்லை; வெப்பம் குறைந்தாலும் அதிகமானாலும், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின், இந்நிலை யினின்றும் மாறுபட்டு, நீர்பனிக் கட்டியாகவும் நீராவியாகவும் மாறுகிறது.......... ஒரு பிளாடினக் கம்பி எரிவதற்கு ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு வெப்பம் தேவை; ஒவ்வொரு உலோகமும் ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் தான் உருகும்; ஒவ்வொரு திரவப் பொருளுக்கும் இறுக்கக்குறி (Freezing Point) உள்ளது. நம்மிடையுள்ள கருவிகளினால் வேண்டிய வெட்ப நிலையையுண்டாக்கினால், ஒரு குறிப்பிட்ட அமுக்கநிலை (Pressure) யில் திரவப் பொருள் ஆவியாக மாறுகிறது; ஆவிநிலையிலுள்ள பொருளொன்றைக் குளிரச் செய்வதனாலும் அமுக்க நிலை மாறுபாட்டினாலும் திரவப் பொருளாக்கலாம். பெரும் பான்மையான பௌதிக நிலைகள் (Constants in Physics) ஒரு பொருள் நகரும் போது ஏற்படும் பரிமாண ஏற்றமும் தாழ்வும் அப்பொருளின் குணமாற்ற மாகவும் பரிமாணம் குணமாகவும் மாறும் உயர்ந்த அளவைகளே"

"பொருள்களில் பரிமாணக் கூடுதலின் மாற்றங்களால் உண்டாகும் குணமாற்றங்களைப் பற்றிக் கூறும் விஞ்ஞானம் கலவைநூல் (Chemistry)........... உயிர்வாயுவை (Oxygen) எடுத்துக் கொள்வோம். வழக்கமாக கூட்டணு (Molecule) வில் இரண்டுக்குப் பதிலாக மூன்று அணுக்கள் (Atoms) இருந்தால், உயிர்வாயு வினின்றும் நாற்றத்திலும் குணத்திலும் தெளிவான மாறுபாடுடைய ஓஸோன் (Ozone) கிடைக்கிறது. உயிர்வாயு சில விகிதங்களில் உப்பு வாயு அல்லது கந்தகத்துடன் சேர்ந்தால், குணங்களில் ஒன்றுக்கொன்று மாறுபடும் பொருள்கள் ஏற்படுகின்றன; (F. Engels. Dialectics of Nature—Anti-Dubring) என அறிவற்ற உலகினின்றும் அறிவுள்ள உலகிற்கும், உயிரற்ற உலகினின்று உயிருள்ள உலகிற்கும் மாறுவது திடீரென ஏற்படுகிறது என்னும் ஹீகலின் கருத்தைத் தழுவி எழுதுகிறார்.

4. எதிரிடைகள் போராடுகின்றன; பழையனவற்றோடு புதியன போராடுகின்றன. இறப்புக்கும் வாழ்வுக்கு மிடையே போராட்டம், மறைவதற்கும் வளர்வதற்கும் இடையே போராட்டம். இப் போராட்டங்களில் பரிமாணத்திலிருந்து குணத்துக்குப் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. இம் மாறுதல்களே வளர்ச்சி (Development) எனப்படும். இவ்வாறு தனது தர்க்க முறையினால் உலகப் பொருள்களின் வளர்ச்சியை விளக்கிக் காட்டுகிறார் மார்க்ஸ்.

பொருள்களின் சாரங்களிலே ஏற்படும் மாறுதலைப் பற்றிக் கூறுவது தர்க்கம். எனவே லெனின் வளர்ச்சி என்பது எதிரிடைகளின் போராட்டம் என்று கூறுகிறார். வெளியுலகையும் மனித நினைவையும் குறித்த கதிகளின் நியதிகளைப் (Laws of motion) பற்றிக் கூறும் நூல் என மார்க்ஸ் கூறுகிறார்.

கார்ல் மார்க்ஸ் இத்தர்க்க முறையைச் சமுதாய வளர்ச்சிக்கு அமைத்துக் காட்டுகிறார். உலகில் எல்லாத் தோற்றங்களும் ஒன்றுக்கொன்று உறவுடன் சார்புடையதாக இருப்பின் ஒவ்வொரு சமூக அமைப்பும், சமூக எழுச்சியும் அக்கால நிலைக்கும் அச்சமூக அமைப்பையும் சமூக எழுச்சியையும் உண்டாக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்றவாறு நோக்க

**மாபாதகங்களின் வற்றாத ஊற்று மதம்.**

வேண்டும். நிலப்பிரபுத்வ முறை தற்காலத்துக்கு ஏற்றதல்ல. அடிமை வியாபாரம் காலத்துக்குகந்ததல்ல. அதுபோல முதலாளித்வமும் இக்காலத்துக்கு ஏற்றதல்ல.

காலம் இடம் நிபந்தனைகள் (Conditions)-இவற்றிற் கேற்றவாறு ஒவ்வொன்றும் அமைகிறது, மாறுகிறது. வரலாற்று நூலைத் (History) தற்செயலாக ஏற்பட்ட சம்பவங்களாகவும் குற்றங்களின் முடிச்சுக்களாகவும் கருதினர் வரலாற்றுத் தத்துவாசிரியர்கள். ஒவ்வொரு சமுதாயத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்று முறைப்படி நோக்காவிடின் வரலாற்றுநூல் வளர்வதும் வாழ்வதும் கடினம். உலகம் மாறுவதும் வளர்வதும், பழையன கழிந்து புதியன வளர்ச்சி நியதிகளுக்குக் கட்டுப் பட்டும் இருப்பின், அகற்ற முடியாத சமூக அமைப்புகளும், தனிச் சொத்தைப் பற்றியும் சுரண்டுதலைப் பற்றியும் நிலை பெற்ற விதிகளும், நிலச்சுவான் தாரருக்குப் பண்ணையாள் என்றென்றும் அடிமை, முதலாளிக்குப் பாட்டாளி அடிமை என்னும் நிலை பெற்ற கருத்துக்களும் இரா. எனவே அடிமை முறையும், நிலமானிய முறையும் அழிந்தது போல முதலாளித்வம் அழிந்து சமதர்மம் நிலை பெற வேண்டுவது இன்றியமையாதது.

சமூகத்தில் வளர்ச்சியடைந்து வாழத் தகுந்த வகுப்புக்களையும் வர்க்கங்களையுமே புதுப்பிக்க இயலும். ஒவ்வொரு விஞ்ஞானியினுடைய கொள்கையும் சென்றதைக் குறித்து சிந்தியாது வருவது குறித்து வகுக்கப் படல்வேண்டும். வேகமற்ற பரிமாண மாற்றம் திடீரெனவும் வேகமாகவும் குணமாற்றங்களை ஏற்படுத்து மாயின் கொடுமை இழைக்கப் பட்ட வகுப்புக்கள் புரட்சி செய்வது தவிர்க்க முடியாத இயற்கைத் தோற்றமாகி விடுகிறது. குடியானவனை நிலச்சுவான்தாரரின் அடக்கு முறையினின்று விடுவிப்பதும் பாட்டாளி மக்களை முதலாளிகளின் கைப்பிடிகளினின்று விடுவிப்பதும் சீர்திருத்தத்தினால் செய்ய முடியாது. புரட்சியினால் தான் முதலாளித்வத்தை அழிக்க முடியும். எனவே ஒவ்வொரு விஞ்ஞானியும் சீர்திருத்த வாதியாக இருப்பதில் பயனில்லை, புரட்சி மனப்பான்மையுடையவர்களாக இருக்கவேண்டும்.

உள்மாறுதல்களாலும், எதிர்ப்பட்ட சக்திகளின் மோதுதலாலும் வளர்ச்சி உண்டாகிறது. எனவே மாறுபாடுகளை விலக்கத் தொழிலாளர் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத இயற்கைத் தோற்றமாக முடிகிறது. எனவே முதலாளித்வத்திலுள்ள குற்றங் குறைகளை மறைத்து வைப்பதில் பயனில்லை. அவற்றை உலகுக்கு எடுத்துக் காட்டி வர்க்கப் போராட்டத்தை ஊக்குவித்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

எனவே முதலாளித்வத்தை அழித்துச் சமதர்மத்தை-சமதர்ம சமூகத்தை ஆக்கப் புரட்சியே முக்கிய கருவி

[குறிப்பு: கட்டுரையாளர் மார்க்ஸீயத் தத்துவத்தைப் பிழிந்தெடுத்துக் கூறியிருக்கிறார். நம் நாட்டுப் பாட்டாளி வர்க்கம் பிறவி முறை என்பதையும் இதற்கான வழிகளையும் விளக்கியிருப்பின் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். [ஆ-ர்]

# எமது தீர்ப்பு

## தமிழ் கற்கும் முறை

விலை ரூ. 1-8-0.
ஆசிரியர்: சா. வேதமுத்து.
பாலகுருகுல வித்தியாலயம்
விருதுநகர்.

இது மாணவர்கள் தமிழ்ப்படிக்கத் தலைப்படும் போதே அழுத்தமாக—திருத்தமாக—செவ்வையாகக் கற்கத் தலைப்படவேண்டுமென்கிற நிலையில் திண்ணைப் பள்ளிக்கூட முறைகளையும் நன்னூல் இலக்கண முறைகளை தழுவி எழுதப்பெற்றதாகும். இக்காலத்திய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் இதனைப்படிக்க வேண்டுமென்றுகூட நாம் கூறவில்லை. முதலில் இதில் ஒரு பரிட்சையே கட்டாயம் அவர்களுக்கு நடத்துதல் வேண்டும். சிறுவர்களுக்கு எழுத்தமைப்பையும் எழுத்தியல்பையும் தழுவி எழுதுகிறேன் என்னும் இவ்வாசிரியரும், எளிய முறையையும் ஏற்ற முறையையும் கைவிட்டுப் பழைய நிலையிலேயே எழுத்து வடிவங்களையமைக்குமுறையை எதிர்காலமும் ஏற்கத்தான் வேண்டுமோ?

## இளைஞர்களுக்கு

விலை 0-8-0.
ஆக்கியோன்: டி. எஸ். வேலன்.
தமிழ் இளைஞர் கழகம்,
13 ஆண்டியப்ப முதலி தெரு,
சென்னை 21.

அஞ்சு கொடிகள் முகப்பை அழகு செய்ய, பகுத்தறிவுச் சரக்கினையே தோழர் வேலன் அவர்கள் மேல்வாரியாக அழகிய நடையில் தந்திருக்கின்றார். அனுபவ உண்மைகள் என்று அவர் குறிப்பிடுவதை அப்படியே படிப்பவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஏனென்றால் அந்த அனுபவ உண்மைகள் ஈரோட்டு அனுபவ உண்மைகள் என்பதை எவரும் தாமாகவே உணர்வர். அவர் வற்புறுத்துவது போல் கட்சி வேற்றுமையின்றி யாவரும் இதனைத் தாராளமாகப் படிக்கலாம்.

## தொழிலாளி.

தனி இதழ் 0-2-0
ஆசிரியர் ஏ. இரத்தின சபாபதி
தங்கவயல்.

உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் தொழிலாளர் நிறைந்த தங்கவயலிலிருந்து எழுந்திருக்கும் 1-2-48ம் நாள் தொழிலாளியைப் பார்த்தோம். தொழிலாளர் நன்மைக்கான முறைகளைப் பகுத்தறிவின் வழி நின்று உணர்த்தும் போக்கு பாராட்டப்பட வேண்டியது. தொளிலாளர்களிடையே நிறைந்த செல்வாக்கைப் பெறுதல் வேண்டும்.

## உரிமை.

(மாத வெளியீடு)
ஆசிரியர் ஆ. இரத்தினம்.
தனி இதழ் 0-3-0.
4/6 காக்ரேன் பேஸின் ரோட்
சென்னை 21.

தாழ்த்தப்பட்டோரின் சமுதாய நலனுக்கென, உரிமையை வற்புறுத்தி உழைக்கும் நோக்கத்துடன், தோன்றியிருப்பது இந்த உரிமை. தாழ்த்தப்பட்டோர் பெயர்கூறி ஒரு சிலர் உயர்த்தப்பட்டோராக நடிப்பதற்கு இடமில்லாதவாறு தாழ்த்தப்பட்டவர் அத்தனை பேரும் உயர்ந்தவர், மனிதத்தன்மை படைத்தவர் என்ற உண்மையை, உரிமையை வற்புறுத்தி நீடித்துத் தொண்டாற்றுமென்று நம்புகிறோம்.

## கொதிக்குமனம்.

ஆசிரியர் மே. வீ. வேணுகோபால் பிள்ளை. விலை அணா 0-1-0.
திராவிடர் கழகம் காஞ்சிபுரம்.

இச்சிறிய கவிதை நூல் காந்தியார் படுகொலையைக் குறித்துக் கூறுவதாகும். இதிற் காணப்படும் ஓரிரு கருத்துக்கள் திராவிடர் கொள்கைக்குப் புதியவைகள்—மாறுபட்டவைகள் என்னலாம்.

## காந்தியார் மரண அநுதாப வெளியீடு.

இது எதுமலையிலுள்ள காங்கரஸ், திராவிடர் கழகம் முதலான 8 கழகங்களின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தியாரின் வாழ்க்கையைச் சுருங்கிய முறையில் விளக்கிக் கூறியிருக்கிறது. விலை தெரியவில்லை.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தீட்சை செய்து வைக்க வேண்டினான். இவர்களை நெருப்பில் போட்டு எரித்தார்கள். தீண்டாத சாதி கோவிலுக்குள் போவதும், தீட்சை பெறுவதும் வைதீக மதத்திற்கு விரோதம். நந்தனை நெருப்பில் குளிப்பாட்டித் தன் சந்நிதிக்குள் அழைத்து வரும்படி யாகநடராஜர் தீட்சதர்களுக்குச் சொன்னதாகச் சொல்லி நந்தனை நெருப்பில் போட்டு எரித்த உடன் புதுவேஷ்டியும் பூமாலையும் ஒரு பார்ப்பானுக்குப் போட்டு வைத்து நந்தன் அக்கினியிலிருந்து எழுந்து வந்து விட்டான் என்று கோவிலுக்குள் கூட்டிப் போனார்கள். பெத்தான் சாம்பானுக்கு முத்தி கொடுப்பது முறை என்று சிவபெருமான் குருக்களுக்குச் சீட்டு எழுதினதாகப் பொய்ப் பத்திரமெழுதிப் பெத்தான் சாம்பனை நெருப்பில் போட்டெரித்துச் சுவர்க்கத்திற்கு அனுப்பினார்கள். பெத்தான் சாம்பன் பெண்டாட்டி இராஜசபையில் முறை இட்டாள். அவனை அவன் விரும்பின மோட்சத்திற்கனுப்பினோம். அதே போல இந்த முள்ளிச் செடிக்கும் மோட்சம் கொடுக்கிறோமென்று அங்கிருந்த முள்ளிச் செடியொன்றை [illegible] இதோ பார் முள்ளிச்செடி மோட்சம் போகிறதென்று கூப்பாடு போட்டு இராஜ சபையைத் திருப்திப் படுத்தினார்கள். இந்தக் காலத்தில் செத்தவர்களைப் பிழைப்பிக்கும் சாமியார் இருக்கிறார் என்று நம்பி, டில்லிக்குக் கூட்டிக் கொண்டு போகும் பிராமண விசுவாசமுடைய மந்திரிகளிருக்கையில், அந்தக் காலத்தில் அதை நம்பிய மந்திரிகளிருந்ததில் ஆச்சரியமில்லை. அதுவுமல்லாமல் வாயால் சொன்னால் வாயில் ஆப்பு வைத்து அடி. மனதால் நினைத்தால் நெஞ்சில் ஆணி வைத்து அடி. என்கிற பிராமண மத தரும சாஸ்திரச் சட்டமிருக்கையில் உண்மை தெரிந்தவர்களும் வாய்பேச முடியுமா? பூமியை விஸ்ணுவுடைய படுக்கை ஆதிசேஷனென்னும் ஆயிரம் தலையை உடைய பாம்பு தாங்கவில்லை. ஆகாய வெளியின் ஆகர்ஷண சக்தி தாங்குகிறது. கெருடன் அண்ணன் அருணன் ஏழு குதிரை பூட்டிய ரதத்தில் சூரியனை வைத்து வீதி சுற்றவில்லை. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. அது பெரிய அக்கினி கோளம். பூலோகத்திற்கு வந்து நம் பெண்களுடன் கூடிப் பிள்ளை பெறாது. சிவபெருமான் நமது பெண்களின் கற்பை அழிக்கப் பூலோகத்திற்கு வரமாட்டார். அதுபோலவே விஷ்ணு வைகுண்டத்தை விட்டுப் பூலோகத்திற்கு வந்து நமதுபெண்கள் குளிக்கும்பொழுது கரையில் வைத்திருந்த சேலையை, எடுத்து மரமேறி, நிர்வாணமாக இரண்டுகையையும் மேலே கூப்பினால்தான் சேலை கொடுப்பேன் என்று சொல்லவுமாட்டார். இந்த வேலைதானா நமது சாமிகளுக்கு? அதற்காகவா பூலோகத்திற்கு எழுந்தருளுகிறார்கள். உலகத்திலுள்ள எந்தச் சாமியும் செய்யாத வேலையை, நம்ம சாமியும் செய்யாதப்பா. பால் கடல், தயிர்க் கடல், நெய்க் கடல், கோமியக் கடல், என்கிற கடல்களில்லை. கங்கை சிவபெருமானின் சடையிலிருந்து உற்பத்தியாகி ஓடிவருவதல்ல. இமயகிரியிலிருந்து பனி உருகிவருகிறது. அகஸ்தியர் கங்கையிலிருந்து கமண்டலத்தில் கொண்டு வந்து பொதிகையில் ஊற்றிய தண்ணீர்ப் பிரவாகமல்ல காவிரி. பொதிகையில் மழைபெய்து அதனால் வருவது என்கிற பூகோள சாஸ்திரத்தை உபாத்தியாயர்கள் சொல்லி விட்டார்களாம். அவை பண்டைய மத சம்பிரதாயங்களுக்கு, விரோதமென்று இராஜாங்கத்திற்குத் தெரிந்திருக்கிறது. இனிமேல் அப்படிச் சொன்னால் உபாத்தியாயர்களைத் தெண்டிப்போமென்று இந்தக் காலத்து ஆங்கிலேய மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கும் கல்வி மந்திரியே உத்தரவு போட்டால், பண்டைய மத சம்பிரதாயத்திலேயே அழுந்திக் கிடக்கும் ஸ்மிருதிச் சட்ட மந்திரிகள் என்ன செய்ய மாட்டார்கள்?

பிராமண வைதீக மதவாதிகள், அவர்கள் மதத்திற்கு விரோதம் பேசினவர்களையும், பகுத்தறிவுவாதிகளையும் அழித்தே விட்டார்கள். இந்து ராஜாக்களின் உதவி பெற்றிருந்ததால், சாதாரண ஆட்சேபனைகளுக்கும் கொடுமையாகத் தண்டித்தார்கள். பழைய ராஜ சபையில் பிராமணப் புரோகிதன் ஒரு மந்திரியாகவிருப்பான். மத விஷயக் கேசுகளிலெல்லாம் அவன் தீர்ப்பே முடிவு. தீர்ப்புக்குச் சட்டம் மனு ஸ்மிருதியே. திருமலை நாய்க்கர், சிவாஜி காலத்திலுமப்படியே நடந்தது. பிராமணன் எந்தக் குற்றம் செய்தாலும் தண்டனை கிடையாது. பிராமணன் கொலைக் குற்றம் செய்தால் அவன் தலையைச் சிரைத்து அசனூருக்கு அனுப்பிவிட வேண்டியது. மற்ற குற்றங்களுக்குத் தண்டனை எப்படியிருக்கும்? நீங்களே ஆலோசித்துக் கொள்ளுங்கள். "பார்ப்பார் பெருத்து வடுகன் துரைத்தனம் பாழ்த்ததுவே" என்று விஜய நகரம் அழிந்ததைக் கண்டு ஒரு புலவன் பாடினான். விஜய நகரம் அழிந்த பின் அவன் பாடினதால் அந்தப் புலவன் தப்பியிருக்கலாம். பதினைந்து வருடத்திற்கு முன் பாலக்காட்டுக்குப் பக்கமுள்ள ஒரு கிராமத்தில் நடந்த, ஒரு வைதீக மதத்தின் தீர்ப்பைச் சொல்லுகிறேன். நம்பூதிரிப் பிராமணர்கள் மல ஜலம் கழிவித்துச் சொந்த தண்ணீருக்கு ஆற்றுக்கோ, குளத்திற்கோ சுத்தி செய்ய வருகையில் கோவணத்தைத் தூக்கி ஆண் குறியைக் கையில் தொட்டுக் கொண்டு வருவார்கள். அதே போல ஒரு நம்பூதிரிப் பிராமணன் ஒரு குளத்திற்குப் பக்கம் வந்தான். அந்தக்குளமுள்ள கிராமத்திற்குப் புதிதாகப் போயிருந்த உத்தியோகஸ்தர்களின் பெண்கள் இரண்டுபேர், அதில் குளித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வேலைக்காரன் பெண்கள் குளிக்கிறார்கள் அங்கே போகப்படாதென்று தடுத்தான். நம்பூதிரி கேட்கவில்லை. தள்ளினான். நம்பூதிரிக்குக் கோபம் வந்து, அந்த ஊர்ப் பெரிய பணக்கார நம்பூதிரியிடம் சொன்னான். உடனே ஜெம்பியான அந்த நம்பூதிரி, அந்த ஊரிலிருக்கும் எல்லா நாயர் குடும்பங்களும் வீட்டைக்காலி செய்து விட்டுப் போய்விடவேண்டுமென்று உத்தரவு போட்டான். உத்தரவு போட்ட நம்பூதிரி ஜெம்பியானதால், பூமியெல்லாம் அவனுடையது. குடியிருப்பு மட்டும் தான் குடியிருப்பவர்களுக்குச் சொந்தம். குளத்திற்குப்போன நம்பூதிரிக்கு ஆட்டியநம்பூதிரிஎன்றுபெயர். ஆட்டிய நம்பூதிரி என்றால் நம்பூதிரிப் பிராமணர்களுக்குப் புரோகிதன். அதனால் எல்லா நம்பூதிரிகளுக்கும் கோபம் வந்து எல்லோரும் ஒன்று சேர்ந்தார்கள். குடிகளெல்லாம்போய்க் கெஞ்சிக் காலில் விழுந்தார்கள். அந்த இரண்டு பெண்களும் சபைக்கு வந்து விழுந்து கும்பிட ஆளுக்கு 25 ரூபாய் குற்றம் வைக்கத் தீர்ப்பு கூறினார்கள். அப்படியே நடந்தது. ஆங்கில உத்தியோகஸ்தர்களும் ஆங்கில எல்லையுமானதால் இவ்வளவோடு வைதீகம் நீதியை முடித்தது. இல்லையேல் குன்னம்பாறை ஏற்றவேண்டியதுதான். குன்னம்பாறை என்றால் பாலக்காட்டு இராஜாக்கள் குற்றவாளியைக் கொலைசெய்யுமிடம். மலையாளத்தில் மத ஆதிக்கம், பூமி ஆதிக்கம் உடையவர்கள் நம்பூதிரி பிராமணர்கள். அதுவுமல்லாமல்இராஜாக்கள் பிரபுக்களான நாயர்கள் வீட்டில் சம்பந்தமென்கிற கலியாணமும் உடையவர்கள். இத்தனையுமிருப்பதால் அவர்கள் இஷ்டம் சட்டம். உத்தரவு தான் நடவடிக்கை. அரிசியும், சர்க்கரையும் பாலும் சேர்த்துச் செய்வதற்குப் பால் பாயசமென்று பெயர். அது மலையாளத்தில் விசேஷம். அதைத் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் செய்து சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் குற்றம், தண்டனை. உளுந்து மாவும் கொஞ்சம் அரிசி மாவும் சேர்த்துச் செய்வதற்கு மலையாளத்தில் வப்படமென்று பெயர். அதைத் தாழ்ந்த சாதிக்காரர்கள் பொரித்துச் சாப்பிடக்கூடாது. இப்படியே அனேக ஆக்கினைகள் மலையாளத்தில் அநேக காலம் நடந்து வந்தது. இங்கிலீஸ் சர்க்காரும் இங்கி

லீஸ் படிப்பும் பரவினதால், எல்லாம் குறைந்து போயிற்று. மலையாளத்து ராஜாக்களெல்லாம் நம்பூதிரிப் பிராமணர்களின் பிள்ளைகளானாலும் இராஜா ஜாதியில் வித்தியாசத்தைப் பிராமணர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். கொச்சி ராஜா பிராமணப் பந்தியில் சாப்பிடலாம். திருவனந்தபுரத்து ராஜா பிராமணப் பந்தியைப் பார்க்கலாம். இப்படியே ஒருவருக்கொருவர் வித்தியாசங்களை, மதத்தின் பெரால் ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். அதனால் சண்டைதான். ஒற்றுமையில்லை. இராஜாக்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டாலும், பிராமணனுக்கு லாபமே ஒழிய நஷ்டமில்லை. பிராமணன் சிப்பாயாய் இருப்பதுமில்லை. சாஸ்திரமுமிடந்தரவில்லை. சண்டையில் ஜெயித்தவனுக்குக் கிடைத்த பொருள்களையெல்லாம், பிராமணனுக்குத் தானம் கொடுத்துவிட வேண்டுமென்பது பிராமணனுடைய தரும சாஸ்திரமென்கிற ஸ்மிருதியின் கட்டளை. இந்த நிலையில் மலையாளமிருந்ததால், டிப்பு சுல்த்தான் வெகு சுளுவாக மலையாளத்தை ஜெயித்தார். அதைவிடச் சுளுவாய் ஆங்கிலேயர்கள் கைக்கு வந்தது. இப்பொழுது அவரவர்கள் கைக்கு வந்திருக்கிறது.பிராமணர்கள் பழைய எட்டைத் திருப்பிப் பார்க்கிறார்கள். எங்கெல்லாம் சந்து கிடைக்கும் அங்கெல்லாம் நுழைக்கலாமென்றிருக்கிறார்கள். கோடி நாம அர்ச்சனை. லெட்ச புஸ்ப அர்ச்சனை, லெட்ச தீபம், நவக்கிர பூஜை, ஜெபம் எல்லாம் செய்யப் புறப்படுவார்கள். புறப்பட்டுமிருக்கிறார்கள். அதிலும் இவர்களுக்கு லாபம்தான். கடைக்காரனுக்குப் பத்து ரூபாய் அதிகச் சம்பளம் கொடுக்காத வியாபாரியும் இரண்டு படி நெல்லுக்கூட அதிகம் கொடுக்காமல் வயலில் வேலை செய்யும் தாழ்ந்த சாதியார்களை வயிறு ஒட்ட வைக்கும் மிராஸ்தாரர்களுமிருக்கையில், அர்ச்சனைக்கும் தீபத்திற்கும் குறைவென்ன?இதனால்மகாத்மாவின் ஆலோசனைக்கோ, அவர் காட்டிய வழிக்கோ ஏதாவது உபயோகமுண்டா? மகாத்மாவின் வழியைப் பின்பற்றி நடக்கச் செய்து விடுமா? "கடவுள் அருள் வேண்டாமா? கடவுளுக்குச் செய்வது குற்றமா?" என்கிற வார்த்தையே மனிதனை ஏமாற்றுவது போலவே கடவுளையும் ஏமாற்றும் வார்த்தை. உண்மையும் சத்தியமும்தான் கடவுளிடமும் பலன் தரும். கடவுளுக்குச் சத்திய சொரூபி யென்கிற பெயரே தவிர, அர்ச்சனை நந்தா விளக்கு சொரூபி யென்கிற பெயரில்லை. ஒவ்வொரு வைதீகச் சமயவாதிகளும் மனிதனையும், கடவுளையும் ஏமாற்றக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அதைச் சொல்லவே சுயமரியாதைச் சங்கம் வந்ததே யல்லாமல் எந்தச் சமூகத்தையும் பகைத்துக்கொள்ளவல்ல.

பிராமண மதஸ்தர்கள் அநேகம் உத்தம புத்தர்களை அழித்தார்கள். நமது தமிழுக்குக் காவியமெழுதி, இலக்கியமெழுதி, இலக்கணம் நிகண்டு செய்து, தமிழைக்காப்பாற்றி நிலை நிறுத்தின அநேக சமணப் பண்டிதர்களைக் கழுவில் போட்டு அழித்தார்கள். யாகம் கூடாது, உயிர்க்கொலையால் துக்க நிவர்த்தியும் மோட்சமுமில்லை என்று சொன்னதுதான் அவர்கள் செய்த குற்றம். இந்தக் குற்றத்திற்குப் புத்தர்களையும் சமணர்களையும் அழித்த திருவிளையாடல் புராணத்தையும், பெரிய புராணத்தையும் படித்துக் கேட்டுச் சைவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். புத்தன் சக்கரமல்ல நமது தேசியக் கொடியில் பறப்பது. புத்த அசோகரின் சத்தியம் நேர்மை நீதியே எல்லோருக்கும் பொதுவாய்ச் சக்கரமாகப்பறக்கிறது. சைவர்களே! எங்கும் நிறைந்த பொருள் எதுவோ அதற்குச் சிவமென்று பெயர். ஆசையற்றவிடத்தில்தான் அப்பொருளைக் காண முடியும். நிராசையின்றித் தெய்வமுண்டோ? ஆசையற்றவிடம் சிவம் என்று சொன்னவர்களும் உங்கள் பெரியவர்கள் தானே? நீங்கள் சைவ சமயத்தை வியாபிக்கப் பிரசாரம் செய்யப்போகிறதாகச் சொல்லுகிறீர்கள். சைவப் பிள்ளைகள் தவிர,மற்றசைவசமயப்பிள்ளைகளைத் தேவாரப்பாடசாலையில் சேர்ப்பதில்லை. அது நீதியா? நேர்மையா? மாமசம் தின்கிறார்கள் என்பீர்கள். நீங்கள் சேர்த்துக்கொண்டால் மாமிசத்தை விட்டு விடுகிறார்கள். காட்டு மிருகத்தை அடித்துப் பச்சை மாமிசத்தைத் தின்ற பண்டையக் காலத்துப் பரம்பரை தானே நாமெல்லாம். சைவச் சாமியில் மாமிசம் திங்காத ஒரு சாமியைச் சொல்லுங்கள். சமயக் கொடுமை, சாதி ஆணவம், ஆசாடபூதி வேஷம், அந்தரங்கப் புரட்டு எல்லாம் விட்டு விட்டுச் சமரசமாய் நீதியும் நேர்மையும் கைக்கொண்டு அதையே பின்பற்ற வேண்டுவதே மகாத்மா காந்தியைப் பின்பற்றுவதாகும். அதுவே நன்மையுமாகும்.


வெளிவந்து விட்டது! எரிமலையின் தீப்பொறி 4.

வாழப் பிறந்தும் வாழ முடியாமல், சாகப் பிறந்தும் சாக மனமில்லாமல் திண்டாடித் தெருவில் நிற்கும் இன்றையத்தமிழனின் இழிநிலைக்கு காரணமென்ன?

................இதையே விளக்குகிறது...............

ஆரியப் புல்லுருவி

அறிஞர் சுப. நாராயணன் எழுதியது.

விலை ஆறணாதான். வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

விவரங்களுக்கு:—

எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா.


## வரப்பெற்றோம்.

**நவீனம்.**

[தனி மாத இதழ் 0-4-0]
ஆசிரியர் வி. எஸ். டி. சாமி.
வேப்பேரி, சென்னை.

**தமிழ்ச் சித்தன்.**

[தனி மாத இதழ் 0-4-0]
ஆசிரியர். ரா'ரங்கநாதன்.
வெள்ளூர்.

**வணிக ஜோதி.**

(மாத மிருமுறை)
ஒரு இதழ் 0—4—0.
ஆசிரியர்: எம். எஸ். மணியன் செட்டியார். 1. மலை[illegible]மாள் தெரு, சென்னை. 1.

**நட்சத்திரம்.**

(வார வெளியீடு)
ஒரு இதழ் 0—1—3.
ஆசிரியர்: எம். ஆர். சுப்பையா, 21. அக்பர் சாகிப் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

## காந்தீபன் தோற்றம்.

தாரமங்கலம் தோழர் டி. எஸ். வேலாயுதம்—மீனாட்சி அவர்கட்கு 1-2-48ம் நாள் பிறந்த ஆண் மகவிற்குப் பெரியார் காந்தி அவர்களின் நினைவாகக் "காந்தீபன்" என்று பெயரிடப்பட்டது. இதை முன்னிட்டு குடி அரசுக்கு அனுப்பிய ரூபாய் ஒன்றும் வரப்பெற்றோம்.

## பிறப்பு

நமது தோழர் டி. வி. நாராயணசாமி-பாப்பம்மாள் அவர்கட்கு 2-2-48ம் நாளன்று ஒரு ஆண் மகவு பிறந்தது.

---

## தேவை.

பழமொழித் திரட்டு (பெரியது) கைவசம் உள்ளவர்கள் ஒரு பிரதி அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

மானேஜர், குடி அரசு,
ஈரோடு.

---

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.